# ஐந்து புதிய செனட்டர்கள் தெரிவு; சிறுபான்மைத் தமிழருக்கு இடமில்லை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
பான்: 389

மலர் 11
இதழ்: 254
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 8 ஷஃபான் 12 வெள்ளிக்கிழமை [24-10-69]

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

கொழும்பு, வியாழன் தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு மற்றும் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒருமனதாக ஒத்துழைத்து ஆதரித்தும்கூட சிறுபான்மைத்தமிழருக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதற்காக ஆட்சிமன்ற மேல் சபைக்கு (செனட்டில் ஒருவரைத் தெரிவு செய்ய முடியாது போய்விட்டது.

சிறுபான்மைத்தமிழரின் சார்பில் திரு. ரி. இராசலிங்கத்தின் பெயரை தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரசும் கூட்டாகப்பிரேரித்திருந்தன. ஆனால் அவருக்குப் போதிய வ க்குகள் கிடைக்காமையால் செனட்சபைக்கு அவர் தெரிவு செய்யப்படவில்லை.

ஆளும்கட்சியின் சார்பில் செனட்சபைக்கு அபேட்சகர்களாக நிறுத்தப்பட்ட திருவாளர்கள் டி. எச். ஜயவிக்கிரமா, டி. ஜி. பி. ரணசிங்கா, ஒஸ்கார் டி. லிவேரா ஆகியோரும் எதிர்க்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்ட ஜனாப் ஐ.ஏ. காதர், திரு. டி. ஜி வில்லியம் ஆகியோரும் புதிய செனட்டர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக வாக்குக் கணிப்பின் பின்னர் சபாநாயகர் சபையில் அறிவித்தார்,

மக்கள் பிரதிநிதிகள்சபை இன்று காலை 10 மணிக்குக் கூடியதும் ஐந்து புதிய செனட்டர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நடைபெற்றது. 10-15க்கெல்லாம் வாக்களிப்பு நடைபெற்று முடிந்துவிட்டது. வாக்களிப்பு இரகசியமாக நடைபெற்றது. 11-15க்கு வாக்குகள் எண்ணி முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டன

தம்பதெனியாப் பிரதிநிதி திரு ஆர் ஜி சேனநாயக்கா, டாக்டர் என் எம் பெரேரா, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு பெர்னார்ட் சொய்சா, திரு பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா, டாக்டர் எஸ் ஏ விக்கிரமசிங்கா, நியமன அங்கத்தவர் திரு எஸ் தொண்டமான் ஆகியோர் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை

தம்பதெனியாப் பிரதிநிதியை யாரோ கடத்திச் சென்றிருக்கவேண்டுமென்றும் அவரைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வீ என் நவரத்தினம் வேடிக்கையாகச் சபையில் குறிப்பிட்டார்

புதிய செனட்டர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நடைபெறுகையில் பிரமுகர்கள் கலரியில் செனட்டர் ரி நீதிராஜா, செனட்டர் எம் கிச்சிலான் ஆகியோரும் செனட்டர் பதவிக்குப் போட்டியிட்ட திரு ஜி பி ரணசிங்காவும் அமர்ந்திருந்தனர் திரு இராசலிங்கம் 'கோட்' அணியாமல் வந்தபோது அவருக்கு அதைச் சுட்டிக்காட்டியதும் ஆட்சிமன்ற உத்தியோகத்தர் ஒருவருடைய கோட்டை சிறிது நேரம் இரவலாக வாங்கி அணிந்துகொண்டு பிரமுகர்கள் கலரியில் அவர் அமர்ந்திருந்தார்

# நவீன மார்க்கட் வேலைகள் தாமதமாவதற்குக் காரணம்?

## மாநகரசபை அசிரத்தை பற்றி 'மைற்ஸ்' தாபன தலைவர் கவலை

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணம் மாநகரசபை பூரண ஒத்துழைப்பு வழங்காததால், நவீன மார்க்கட் கட்டும் வேலைகளில் தாமதம் ஏற்படக்கூடியநிலை உருவாகியுள்ளது. இவ்வருடம் ஜூலை மாதம் எமது ஸதாபனத்திற்கு தரவேண்டிய 8000ரூபாவையும் மாநகரசபை இன்னும்தரவில்லை. இதனால் எமது வேலையாட்களுக்கு சம்பளம்வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது, இப்பணவிஷயமாக நேற்று முன்தினம் இதற்கு பொறுப்பான அதிகாரியை நாம் சந்தித்தபோது அவர் எவ்விதபதிலும் அளிக்கவில்லை.**

யாழ்ப்பாணத்தில் நவீன மார்ககட்டை கட்டுவதற்கு பொறுப்பாயுள்ள மைற்ஸ்தாபன தலைவர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா நேற்று நமது நிருபருக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மகாதேவா மேலும் கூறியதாவது; மார்க்கட் நிலத்திற்கு ஊடாக செல்லும் மின்சார கேபிளை அகற்றித்தரும்படி பல தடவை மாநகர சபையிடம் கேட்டோம். அவர்கள் இதுபற்றி அக்கறை காட்டவில்லை பின் இன்னும் தொடர்ந்து மழை பெய்யுமானல் மேலும் தாமதம் ஏற்படக்கூடும்.

நாங்கள் மாநகர சபையுடன் செய்த ஒப்பந்தப்படி 1970ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நவீன மார்க்கட் கட்டிமுடிக்கவேண்டும். நாம் வேலைகளை மிக விரைவில் செய்துமுடிக்கவே தீர்மானித்துள்ளோம். ஆனல் மாநகர சபையின் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கவில்லை. எமது குறிக்கோள் முதலாவது கட்டிடத்தை தைப்பொங்கலுக்கு முன்னர் இப்படியான நிலையில் நாங்கள் கஷ்டப்படுகிறோம்.

மேயரையும், ஆணையாளரையும் மராமத்து இன்ஜினியரையும், நாம் சந்தித்தபோது மண்கும்பான் மண் பிழையில்லை என்று இன்ஜினியர் தெரிவித்தார் மண்

(4-ம் பக்கம் பார்க்க)

''வேலையில்லாப் பிரச்னை

## ஆட்சிமன்றம் மூலம் தீர்க்கமுடியாது''

உடுப்பிட்டி வியாழன் 'இன்று உச்சநிலையிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையோ அல்லது வாலிபர்களின் எந்தப் பிரச்னையோ பாராளுமன்றத்தில் தேர்தல் மூலம் மட்டும்தீர்க்கப்பட்டு விடும்என்று நமது வாலிபர்கள் நினைத்திருந்தால் போராட்ட உணர்வு மழுங்கி மேலும்மேலும்துன்பத்திற்கு ஆளாகநேரிடும். பாராளுமன்றத்தினல் மட்டும் நமது பிரச்னைகள் தீருமென்பது நிச்சயமில்லை.'

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன தேசிய அமைப்பாளர் திரு கே. டபிள்யூ. சோமரத்தின கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி லட்சுமி தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்ற வட பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளன 6-வது மகாநாடு சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

ஈழம்வாழ் தமிழ் வாலிபர்களின் இன்னல் தீர்க்கும் வழிகாணப் போராட்டத்தில் இறங்கி உள்ளோம். இதன் ஆரம்ப கட்டமாக இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வாலிபர்களின் கால்நடைப் பவனியை ஆரம்பித்துள்ளோம்

இதன்பின்னும் ஆட்சியினர் வாலிபர்களின் பிரச்னையில் அசிரத்தையாக இருப்பாரெனில் எமது போராட்டங்களின் வடிவம் மாறும். சிங்கள வாலிபர்களைப் போன்றே தமிழ் வாலிபர்களும் எமது அணியில் போராட்டக் களத்தில்குதிக்கத் தயாராக உள்ளனர்.

## மூன்று வருடங்களில்

# ஏகோபித்த குரல் எழுப்பியது லட்சியத்துக்கு கிடைத்த வெற்றி

என்கிறார் இராசலிங்கம்

கோட்டை, வியாழன் இன்று நடைபெற்ற செனட்சபைத் தேர்தல் சம்பந்தமாக நமது நிருபரிடம் அபிப்பிராயம் தெரிவித்த திரு.ரி.இராசலிங்கம், தாம் பதவி ஆசை குறித்து இதில் சடபந்தப்படவில்லை என்றும் ஓர் இலட்சியக் குறிக்கோளாகவே தாம் இதில் சம்பந்தப்பட்டதாகவும், தாம் தெரிவு செய்யப்படாதுபோனலும் இது பெரிய வெற்றியைத் தந்துள்ளது எனத் தெரிவித்தார். தமது நியமன விஷயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் எல்லோரும் ஐக்கியப்பட்டதும், சிறுபான்மைத் தமிழர்கள் ஏகோபித்த குரல் எழுப்பியதும். அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் சிறுபான்மைத் தமிழர்கள் விஷயத்தில் நிலைமையுணர்ந்து அக்கறை காட்டி நடவடிக்கை எடுக்க முன்வந்ததும்தான் அந்த வெற்றி என்று திரு. இராசலிங்கம் விளக்கினர்.

திரு.இராசலிங்கம் மேலும் தெரிவித்ததாவது: இது ஒரு சோதனை. இதில் வெற்றியே எனக்குக் கிடைத்துள்ளது. தமிழ்அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சிங்கள அரசியல் வாதிகளும் இதில் ஒத்துழைத்த குரல் கொடுத்தது தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை வெளிப்படுத்துகிறது. சிறுபான்மைத் தமிழர் மத்தியிலும் இவ்விஷயத்தில் ஏகோபேித்தகுரலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனவே சிறுபான்மைத் தமிழர்களையும் பெரும்பான்மைத் தமிழர்களையும் ஒரு கோரிக்கையில் இணைத்ததில் நாம் வெற்றிகண்டுள்ளோம் இதில் போட்டியில்லாத தன்மை ஏற்பட்டது பெரும் வெற்றியே.

சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதித்துவத்தில் இப்போது முன்னெப்போதையும் விட நம்பிக்கையான ஒரு நிலையேற்பட்டுள்ளது. இதில் ஒத்துழைத்த சகலருக்கும் நான் நன்றி கூறுகிறேன்

# "பிரதமர் தவறு செய்துவிட்டார்"

யாழ்ப்பாணம், வெள்ளி ''சிறுபான்மைத் தமிழர் சமூகத்துக்கு செனட் சபையில் ஓரு பிரதி நிதித்துவம் கிடைக்காமல் போன தற்கு பிரதமர் செய்த தவறுதான் காரணம்'' என்று அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத்தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் நேற்று நமது பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

''நாங்கள் பிரதம மந்திரியைச்சந்தித்துஎங்கள் நிலைமையை விளக்கிக்கூறியதுடன் ஒருபகஜரையும் அவரி இரட்டையங்கத்தவர் தொகுதியோ தனித்தொகுதியோ உருவாக்கப்படுவதற்கு முன்னர் தற்சமயத்துக்கு செனட்சபையில் சிறுபான்மைத்தமிழருக்கு ஒரு நியமனப்பிரதிநிதித்துவமாவது வழங்கப்படவேண்டுமென அவரைக்கேட்டுக் கொண்டோம். ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறமுடியாத ஒரு சமூகத்துக்கு செனட் சபையில் ஒரு நியமனப்பிரதிநிதித்துவமாவது வழங்கியிருக்கலாம். இதைச் செய்யப் பிரதமர்

# தேசிய சுவீப் முடிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமரத்தினு கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி லட்சுமி தியேட்டர் மண்டபத்தில் நடைபெற்ற வட பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளன 6-வது மகாநாடு ... சிங்கள வாலிபர்களைப் போன்றே தமிழ் வாலிபர்களும் எமது அணியில் போராட்டக் களத்தில்குதிக்கத் தயாராக உள்ளனர்.

# மூன்று வருடங்களில் 5,000 சைக்கிள்கள் களவு

கோட்டை, வியாழன்

'சைக்கிள் பாவனையாளர்கள் தங்கள் சைக்கிள்களைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் 1966-ம்ஆண்டிலிருந்து 1968-ம் ஆண்டுவரை அதாவது 3 வருட காலப் பகுதிக்குள் 5000 சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளது'.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபன நிகழ்ச்சிகளில் 'பொலீசும் நீங்களும்' என்ற தொடரில் வழங்கப் பட்டு வரும் சொற்பொழிவுகளில் 35 வது சொற்பொழிவாக 'சைக்கிள்கள்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு கே இராஜசுந்தரம் தனது பேச்சில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரது சொற்பொழிவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இன்று நம்நாட்டில் மற்ற எல்லா வாகனங்களிலும் பார்க்கச் சைக்கிள்களின் தொகையே அதிகரித்துள்ளது. சைக்கிள் பாவனையாளர்கள் பலர் சைக்கிள் ஓடுவது சுலபம் என நினைத்து அதற்கான ஒழுங்கு விதிகளைக் கவனியாது தாங்கள் நினைத்தபடி சவாரி செய்வதனுல் அதிகமான விபத்துக்கள் சம்பவிக்கின்றன. 1968-ம் ஆண்டு 1,297 பேர் விபத்துக்குள்ளாகி காயமடைந்தனர். இச் சைக்கிள் விபத்துக்களினுல் இவ்வாண்டு 73 பேர் இறந்தனர்.

ஒருசைக்கிளில் இருவர் சவாரிசெய்தல். அளவுக்கு மிஞ்சிய பொருட்களை ஏற்றல், வரிசையாகச் சைக்கிள்களில் பாதையை மறித்து சவாரி செய்தல் போன்ற பல தவறுகளைத் தவிர்த்தால் விபத்துக்கள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

மேலும் சைக்கிள் பாவனையாளர்கள் தங்களின் சைக்கிள் பூட்டுச் சம்பந்தமாகக் கவனமாகவிருந்தால் சைக்கிள்கள் களவு போகாமல் பார்த்துக் கொள்ளலாம் சைக்கிள் களவு போனுல் அதை உடனடியாக பொலீசாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

சைக்கிள்களை நல்ல நிலைமையில் வைத்திருப்பதோடு சைக்கிள் சவாரிக்கான ஒழுங்கு விதிகளையும் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

---

## இன்று இரத்த திலகம்

ஊரதீவு, வெள்ளி

தமிழர் சுயாட்சி கழகத் தலைவரும், ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினருமான திரு வ நவரத்தினத்துக்கு இரத்தத் திலகமிடும் வைபவம் இன்று புங்குடுதீவில் நடைபெறும்,

புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் புங்குடுதீவு கிராம சபை உறுப்பினர் திரு வே சி அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற இருக்கும் தமிழர் சுயாட்சிக் கழகப் பிரசாரக் கூட்டத்தில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் இரத்தத்திலகமிடுவார்.

---

...வாறு தெரிவித்தார்.

திரு. மகாதேவா மேலும் கூறியதாவது; மார்க்கட் நிலத்திற்கு ஊடாக செல்லும் மின்சார கேபிளை அகற்றித்தரும்படி பல தடவை மாநகர சபையிடம் கேட்டோம். அவர்கள் இதுபற்றி அக்கறை காட்டவில்லை பின்னர் நமது செலவில் சொந்த முயற்சியால் மின்சார இலாகாவுடன்தொடர்புகொண்டு அந்த மின்சார கேபிளை அகற்றி தள்ளிப்போட்டு தொடர்ந்து வேலைகளைச் செய்தோம்.

மார்க்கட்டுக்கு தேவையான தூண் ஒன்றை நாட்ட முடியாமலிருக்கிறது. தண்ணீர் தொட்டியை அகற்றித் தரும்படி மாநகரசபையிடம் கேட்டோம். இதுவும் இன்னும்செய்யப்படவில்லை. அங்குள்ள கடைக்காரர் ஒரு சிலர் இன்னும் வேறுஇடத்திற்கு அகற்றப்படவில்லை இதுபற்றியும்சபையிடம் பல முறை சொன்னேம் நமது வேலைத்தலத்தில் ஒரு பகுதியை கடைக்காரருக்கு ஒதுக்கித் தருவதாகவும் சொன்னேம் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை இவற்றினுல் நவீன மார்க்கட் கட்டும் திட்டம் 5 வாரங்களால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மழைக்கு முன் தூண்களை நிறுத்தி கூரையைப்போட்டு கீழ்வேலைகளை செய்யலாம் என முடிவுசெய்திருந்தோம் ஆனுல் அடைமழை தொடர்ந்து பெய்து எங்கள் திட்டத்தை சீர்குலைத்துவிட்டது ...கட்டி முடிக்கவேண்டும். நாம் வேலைகளை மிக விரைவில் செய்துமுடிக்கவே தீர்மானித்துள்ளோம். ஆனுல் மாநகர சபையின் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கவில்லை. எமது குறிக்கோள் முதலாவது கட்டிடத்தை தைப்பொங்கலுக்கு முன்னர் முடித்துவிடவேண்டும் என்பதுதான். மற்ற இரு கட்டிடங்களையும் சித்திரை வருடப்பிறப்பிற்குமுன் முடிக்கவும் தீர்மானித்துள்ளோம். எமக்கு மறைமுகமாக சில தடைகள் ஏற்பட்டுவரும் போதும் நாம் பொறுமையுடன் வேலைகளைக்கவனித்து வருகின்றேம்.

மாநகரசபை மண்சம்பந்தமாக விவாதித்து முடிவுஎடுக்கும்வரை பொறுமையாக இருந்தோம் அதன் பின்னரும் காசு வழங்குவது தாமதிக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரியை நேற்றுமுன்தினம் காசைப் பற்றி நேரில் கேட்டபோது இம்மாதம் 26ம்தேதி கொழும்பில் பேசி காசு வழங்க முயற்சிப்பதாக கூறினுர்.

ஒப்பந்தப்படி கன்கிறீட் வேலைகளுக்கு கண்டாவளை மண்பாவிக்கவேண்டும் மற்றும் வேலைகளுக்கு மண்கும்பான் மண்பாவிக்கவேண்டும் தற்காலிக வேலைத்தளத்திற்கு மண்கும்பான் மண் பாவிக்க என்ஜினியரிடம் அனுமதி எடுத்திருந்தோம்.

ஆகஸ்ட் 26ம் தேதி ஆணையாளருக்கு இவ் விஷயமாக எழுதிய கடிதத்திற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை

---

'விஞ்ஞானத்திற்கும்

## அப்பாற்பட்ட ஒருசக்தியுண்டு'

நெடுந்தீவு,வியா.

விஞ்ஞான வளர்ச்சியால் இன்று அமெரிக்கர் அம்புலியில் இறங்கிய போதிலும் அகிம்சை, அறநெறிவழியில் நான்கு முழக் கதர் வேட்டி உடுத்து எளிமையான, தூய்மையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய காந்தி மகானுக்கு ஏன்விழா எடுக்க வேண்டும். விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்தாலும், அகிம்சை. அறநெறி ஆகிய வைக்கும் இடமுண்டு என்பது புலனுகிறது. விஞ்ஞானத்துக்குமப்பால் ப்பட்ட ஒரு சக்தியுண்டு என்பதை விஞ்ஞான வளர்ச்சி அடைந்தநாடுகளும் ஒப்புக்கொள்கின்றன.

இவ்வாறு நெடுந்தீவுமகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய திரு. கே. சிவராமலிங்கம் அவர்கள் கூறினுர். விழாவுக்கு அதிபர் திருஎன். குருநாதன் தலைமை தாங்கினுரி. மற்றும் திரு. எஸ். வினுயகமூர்த்தி, செல்வி செ. தனலட்சுமி, செல்வன் க. பேரின்பநாயகம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினுர்கள். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

# போதனைப் பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது

கொழும்பு, வியாழன்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து நேற்றுமுதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பிரச்னையில் தலையிட்டு தீர்வுகாணும் படி பேராதனை மாணவர் சபை பல்கலைக்கழக அத்தியட்சகரான கவர்னர்ஜெனரலுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. இக் கடிதத்தை அத்தியட்சகர் கல்விமந்திரிக்கு அனுப்பியிருப்பதாக தெரிய வருகிறது.

ஆயுதம் தாங்கிய பொலிசார் தொடர்ந்து பல்கலைக் கழக வளவில் காவல்புரிந்து வருகின்றனர்.

பல்கலைக்கழக வளவிலிருந்து பொலிசாரை வெளியேற்றவேண்டுமென்றமாண கோரிக்கை நிராகரிக்கப் பட்டு விட்டது.

பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதெனத் தீர்மானித்துள்ளது. மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் மோதல் ஏற்படக்கூடிய நிலைமை உருவாகி வருவதால் பல்கலைக் கழக வளவிலருந்து பொலிசாரை வெளியேற்றும்படி ஆசிரியர்கள் சங்கம் உப-அத்தியட்சகரிடம் கோரியுள்ளது.

---

(4-ம் பக்கம் பார்க்க)

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 269-வது இலக்க சுவீப்பின் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
05 N 0353 - ரூ. 85,030

2-வது பரிசு
03 X 0502 - ரூ. 34,012

3-வது பரிசு
27 A 0036 - ரூ. 8,503

தலா ரூ. 425-15 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 09 X 0297 | 18 G 0114 |
| 34 D 0400 | 14 V 0312 |
| 20 H 0423 | 29 U 0417 |
| 09 T 0787 | 36 O 0704 |
| 11 H 0572 | 01 T 0742 |
| 29 E 0102 | 08 A 0641 |
| 14 U 0533 | 17 B 0474 |
| 35 J 0028 | 05 J 0965 |
| 15 H 0769 | 34 Q 0903 |
| 03 X 0156 | 04 B 0914 |
| 20 B 0700 | 20 T 0827 |
| 30 T 0935 | 20 P 0779 |
| 28 C 0844 | 21 F 0950 |
| 19 W 0333 | 38 K 0064 |
| 16 G 0301 | 25 F 0832 |
| 14 P 0126 | 02 Q 0723 |
| 15 J 0829 | 32 V 0990 |
| 34 W 0010 | 12 C 0857 |
| 05 J 0871 | 19 A 0781 |
| 17 G 0117 | 37 E 0150 |
| 22 Y 0033 | 21 N 0900 |
| 35 L 0040 | 06 Q 0478 |
| 17 N 0822 | 03 W 0623 |
| 21 J 0645 | 31 L 0037 |
| 25 M 0317 | 16 F 0141 |
| 14 H 0053 | 31 T 0026 |
| 16 P 0199 | 25 H 0519 |
| 23 Y 0207 | 21 J 0432 |
| 14 H 0918 | 22 Q 0466 |
| 22 Z 0529 | 25 N 0533 |
| 23 T 0850 | 34 O 0609 |
| 14 G 0749 | 14 Q 0958 |
| 23 V 0622 | 06 V 0593 |
| 28 X 0344 | 13 Z 0002 |
| 17 Y 0254 | 02 R 0436 |
| 23 T 0739 | 02 B 0491 |
| 08 M 0380 | 20 P 0314 |
| 28 J 0751 | 12 Z 0832 |
| 01 V 0707 | 04 Z 0805 |
| 13 F 0295 | 01 P 0113 |
| 35 C 0958 | 06 B 0041 |
| 02 X 0324 | 22 H 0530 |
| 16 G 0947 | 32 E 0899 |
| 32 E 0437 | 34 G 0163 |
| 09 M 0052 | 19 H 0467 |
| 20 C 0496 | 32 P 0144 |
| 32 U 0812 | 11 A 0046 |
| 29 W 0887 | 14 L 0404 |
| 18 E 0947 | 17 N 0712 |
| 30 A 0830 | 25 H 0532 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

---

...லிங்கம் விளக்கினுர்.

திரு. இராசலிங்கம் மேலும் தெரிவித்ததாவது: இது ஒரு சோதனை. இதில் வெற்றியே எனக்குக் கிடைத்துள்ளது. தமிழ்அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சிங்கள அரசியல் வாதிகளும் இதில் ஒத்துழைத்தார்கள். இரு பெரும் தமிழ்க் கட்சிகளும் ஏகோ...

...ழர் மகாசபைத்தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் நேற்று நமது பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

''நாங்கள் பிரதம மந்திரியைச்சந்தித்துஎங்கள் நிலைமையை விளக்கிக்கூறியதுடன் ஒருமகஜரையும் அவரிடம் சமர்ப்பித்தோம். சிறுபான்மைத் தமிழருக்கென ...மென அவரைக்கேட்டுக் கொண்டோம். ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறமுடியாத ஒரு சமூகத்துக்கு செனட் சபையில் ஒரு நியமனப்பிரதிநிதித்துவமாவது வழங்கியிருக்கலாம். இதைச் செய்யப் பிரதமர் தவறிவிட்டார்'' என்று திரு. சுப்பிரமணியம் கூறினுர்.

---

# 'ஆங்கில மொழிக் கல்வியின் அவசியம் இப்போது உணரப்படுகிறது'

## பேராசிரியர் கூறுகிறுர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''இலங்கையில் ஆங்கில மொழிக் கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று கல்வி மந்திரி உட்பட்ப பல முக்கியஸ்தர்கள் கூறுகிறுர்கள். போதனுமொழி தாய்மொழியாகிய பின்பும் ஆங்கில மொழியின் அறிவு அவசியமென்பதை அதிகாரபீடத்தினரும் உணர்கின்றனர்.'' பேராசிரியர் திரு. த. கனகசபாபதி இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நேற்று மாலை கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் பேராசிரியர் திரு. த. கனகசபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மேலும் பேசுகையில், கல்வியில் சமயக் கல்வியே உயிர்நாடி போன்றதென்றும், அதுவே நமக்கு வையத்தில் வாழ்வாங்கு வாழும் நெறியைப் புலப்படுத்துகின்றது என்றும் கூறினுர். கல்லூரியில் மாணவர்கள் பெறும் அறிவு, வாழ்க்கை முழுவதுக்கும் அத்திபாரமனது என்றும் குறிப்பிட்டார்.

---

ஜனுப் காதர் மீதான

# தேர்தல் ஆட்சேப மனு செலவுதொகையுடன் தள்ளுபடி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரான ஜனுப். எம் ஏ.சி.ஏ.எஸ். காதருக்கு எதிராக முன்னுள் உறுப்பினர் ஹாஜி.வி.எம். எம். அபுசாலி தொடர்ந்த தேர்தல் ஆட்சேப வழக்கு நேற்றுக் கொழும்பு சுப்பிறீம்கோர்ட்டில் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜனுப்.காதர் உபதபாற்கந்தோர் அதிபராக இருந்து கொண்டு யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினராகஇருப்பதால் அவரது மாநகரசபை உறுப்பினர் பதவி செல்லுபடியாகதெனத்தீர்ப்பு வழங்கும்படி ஹாஜி. வி.எம்.எம். அபுசாலி மனுதாக்கல் செய்திருந்தார்.

மனுதார் சார்பில் அட்வகேட் எம். திருச்செல்வம், அட்வகேட் கே. என். சொக்ஸி, அட்வகேட் எஸ். சந்திரகாசன் ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் புவிமனசிங்கியின் அனுசரணையுடனும் ஆஜராஞர்.

எதிர் மனுதார் சார்பில் அட்வகேட் டி.ஆர், எஸ். எஸ் குமாரசாமி, அட்வகேட் ரி. கனகசபை, அட்வகேட் ஏ.எம்.மாலின் ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் யூ. எல்.பருகன் அனுசரணையுடனும் ஆஜராஞர்.

---

## மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்திபெற்றோர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மாணவ ஆசிரியர் பரீட்சையில் வட பகுதியில் சித்திபெற்றோர் வருமாறு: இவர்கள் நேர் முகப் பரீட்சைக்கு விரைவில் அழைக்கப்படுவர்.

யாழ்ப்பாணம்: ஏ ஆர் பிலோமினு, ஜே நல்லையா, ஈ என் றொட்கரஸ், எம் எஸ் அப்துல்ஹமீத், எஸ் என் செல்வசந்திரன், எம் எம் சுவாமிபிள்ளை, ஏ ஏ ஜெகநாதன், பி துரைசிங்கம், என் எஸ் செல்லையா, ஏ கதிரவேற்பிள்ளை, எம் ஓ பிள்ளைநாயகம், பீ எம் சுவாமிநாதன், எம் ஏ சமூன் எம் ஸீ மலீஹா எஸ் எச் சித்தி ஜனுனு, என் கர்வத்தி, டீள்யூ எம் ஸீ பொன்சேகா, ஈ எல் ஜினதாஸ, ஆர் ஏ பெர்னுந்து, டபிள்யூ ஆர் ஏ பெர்னுந்து.

ஊர்காவற்றுறை: ஆர் வுரி, என் உருத்திரலிங்கம், எம் கமலேஸ்வரி, பீ ராஜேஸ்வரி, எஸ் இஸ்மாயில் மொஹமட்.

வட்டுக்கோட்டை: எஸ் கனகசபாபதி, எஸ் சண்முகலிங்கம், எஸ் வேலாயுதபிள்ளை, கே சிவசுப்பிரமணியம், பீ பத்மநாதன், ஏ பீ ஆர் டீ ஜேமிஸ்.

காங்கேசன் துறை: ஏ சாரதாமணி, எஸ் ஆரியகொடி, எஸ் செல்வநாயகம் கலாதேவி சுந்தரமூர்த்தி, எஸ் கனகமலர்தேவி, கே சின்னத்துரை, பீ ஞானசௌந்தரி.

உடுவில்: பீ இனுவை சுப்பிரமணியம், எஸ் சிவஞானசுந்தரம், ஆர் குணநாயகி, பீ கந்தசாமி, எம் மயில்வாகனம், பீ பார்வதி.

சாவகச்சேரி: என் முத்துக்குமார், பீ கனகராஜா, வீ குமாரசாமி, எம் நாகேந்திரராசா, பீ கிருஷ்ணபிள்ளை வீ கமலாதேவி, எஸ் நவநீதவல்லி, எஸ் சங்கரப்பிள்ளை, பீ வீ ராசரத்தினம் கே மொகமட் கரீம், கே மொஹமட் இக்பால்.

பருத்தித்துறை: எஸ் தாமோதரம்பிள்ளை, என் வரதராஜா, கே அமிர்தலிங்கம், எஸ் சேகராஜசிங்கம்.

உடுப்பிட்டி: பி பரந்தாமன், எஸ் கந்தசாமி, எஸ் ராசரத்தினம், எம் துரை

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். வர்த்தகர் பாதுகாவல் சங்கத்திற்கு நாலுகாவலாளர்கள் தேவை. விண்ணப்பகாரரர்கள் கல்விஅறிவு நன்னடத்தை, திடகாத்திரம், 25க்கு மேல் 50க்கு உட்பட்ட வயது உடையவர்களாக இருத்தல் வேண்டும் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-10-69க்கு முன் விண்ணப்பிக்கவும். நேர்முகப் பரீட்சை 1-11-69-ல் நடைபெறும். யாழ் வர்த்தகர் பாதுகாவல் சங்கம் அலுவலகம் 76, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1499

தமிழில் படிப்பிப்பதற்கு விஞ்ஞானப் பட்டதாரிகளும் வேலை செய்யக்கூடிய நிலையிலுள்ள ஆங்கில தட்டச்சுயந்திரமும் உடன் தேவை. காரியாலய நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும். 60, புங்கங்குளம்வீதி, யாழ்ப்பாணம். 1496

கைத்தறி நெசவு நிலையமொன்றுக்கு நன்கு அனுபவமுள்ள நெசவாளர் தேவை. சகல வசதிகளும் வழங்கப்படும். விண்ணப்பங்கள்: ஐ. இராசமணி, தோரும்புலம், அச்சுவேலி. 1099

### விற்பனைக்கு

வீடு

சகல வசதியுடன் வீடும் கட்டிடக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 32, நல்லூர் ஆறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 1489

காணி:

அனலைதீவு ஐயனார் கோவிலடி தெற்குப் பக்கம் ஐயர் வளவு 12 பரப்பும் கடைக் கட்டிடமும் கூழாவடிதோட்டம் 12 பரப்பும் நியாயமான விலைக்கு விற்கப்படும். கு. வி. தம்பித்துரை, 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1497

## உதைபந்தாட்டம்

பருத்தித்துறை, வியாழன்

யாழ்ப்பாணப்பாடசாலை உதைபந்தாட்டக்கழக ஆதரவின் கீழ் நடக்கும் சுற்றுப் போட்டியில் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி 3-ம் பிரிவுக்கோஷ்டியும், நெல்லியடி மத்தியமகாவித்தியாலயக்கோஷ்டியும் மோதிக் கொண்டபோது நெல்லியடிக்கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. எஸ். தர்மராஜா மத்தியஸ்தம் வகித்தார்

இரு கல்லூரிகளின் 2-ம் பிரிவுக் கோஷ்டிகளுக்கு மிடையே நடந்த போட்டியில் தேவரையாளிக்கோஷ்டி 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. கே. எஸ். சிதம்பரநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### விற்பனைக்கு

தையல் மெஷின்:

சகல தையல்களும், பூவேலைகளும் செய்யக்கூடிய பாவிக்காத மின்சாரத்தால் இயங்கும் புதிய தையல் மெஷின் (சிங்கர்) மொடல் 348 விற்பனைக்குண்டு. விலை ரூபா 3800/-. 5A றக்கா றேட், யாழ்ப்பாணம். 1493

கார்:

நல்ல நிலையிலுள்ள ஒஸ்டின் 8 கார் விற்பனைக்கு உண்டு. ச. வேலாயுதபிள்ளை, அடைக்கலம் தோட்டக் கந்தசாமி கோவிலுக்கருகாமையில், வட்டுக்கோட்டை. 1494

### வாடகைக்கு

வாடகைக்கு நவம்பர் 1-ந் திகதியிலிருந்து 34|7, செட்டித்தெரு, நல்லூரிலுள்ள இரண்டு அறைகள் குசினி கொண்ட வீடும், வளவிலுள்ள பிரயோசனமும் கொடுக்கப்படும். மின்சார வசதி இல்லை. தொடர்பு: நா. தியாகராஜா, 34/5, செட்டித்தெரு, நல்லூர். 1498


### தீபாவளி மலிவு விற்பனைக்காக

புதிதாக வரவழைக்கப்பட்ட

★ றூபி நைலெக்ஸ் சேலைகள்
(10 மட்டும்) வ. வி. 39-50 ம. வி 34-50

★ கஷ்மீர் டிசைன் ஜோர்ஜெட் சேலைகள்
(7 மட்டும்) வ. வி. 52-50 ம. வி. 45/-

**டயரும்ஸ்,**

54, 60, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.


# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 8-ந் திகதி 24 - 10 - 69)

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- தனத்துடன் வாழ்வு இன்று தவறாது கிடைக்கும். சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. நீண்டநாள் கடன் நிவர்த்தியாகும். வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

**ரிஷபம்**- சூழ்ச்சிவலை பின்னும். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறும். கடன்படநேரிடலாம். மனஅடக்கம்வேண்டும்.

**மிதுனம்**- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

**கடகம்**- புத்திரவழியால் புகழ்வந்து சேரும் வெளியூர் புதினமும் உண்டு. குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். புதிய தொடர்புகள் ஏற்படும். அதன்வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

**சிம்மம்**- பொருள் விரயத்திற்கு இடமுண்டு. கடமையாற்றும் இடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும். நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும். சிக்கலைத் தவிர்க்கவும்.

**கன்னி**- சமயோசிதபுத்தி உங்களுக்குத் தாராளமான சிந்தனைகளைத் தேடித்தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

**துலாம்**- ஏக்கத்தின் சாயல்தாக்கும். எதிர்பாராத விதமாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளநேரிடும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். நிதானம்வேண்டும்.

**விருச்சிகம்**- கட்டிவெல்லம்போல் இனிக்கும்வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும். எதிர்பார்த்தவரவிலும் திருப்தி ஏற்படும்.

**தனுசு**- அறவழியை நாடுவீர்கள். தெய்வசிந்தை மேலோங்கி நிற்கும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். புண்ணிய யாத்திரையொன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

**மகரம்**- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள். நீண்டநாள் கனவு இன்று நனவாகும். சகலதுறைகளிலும் முன்னேற்றம்உண்டு.

**கும்பம்**- கண்துடைப்பு வேலைகளால் நலிவுக்கு இடமேற்படும். உடல்நலமும் சிறிது பாதிக்கலாம் குடும்பத்தில் சிறுபூசல் தோன்றிமறையும். உணவுவிடயத்தில் கவனம்வேண்டும்.

**மீனம்**- தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும். வேண்டியவர் ஒருவரைப் பகைத்துக் கொள்ளநேரிடும். கடமையாற்றும் இடத்தில் நிதானம் வேண்டும். மௌனம் நன்று.

## சிறுவர் சித்திரக்காட்சி

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளின் சிறுவர் சித்திரக் காட்சி யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறும். இக்காட்சியை மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் ஆரம்பித்து வைப்பார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 24—10 69

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-18 இஸ்லாமியகீதங்கள்,

## சிரமதானப் ..

3ம் பக்கத் தொடர்ச்சி

யிருக்கிறது. ஐயன் காந்திக்கு நாம் மதிப்பளிப்பது உண்மையேயானுல், மது அருந்தும் தீய முறைக்கு சாவு மணி அடிப்போமாக!

மலையக சமுதாயத்தின் பொருளாதார விடுதலைக்கு காங்கிரஸ் திட்டமிட்டு ஆரம்பித்துள்ள இ தொ. கா. லிமிட்டெட் மூலம் நமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய சிறந்த வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. இந்த நாட்டின் வரலாற்றிலேயே இதுபோன்ற துணிகரச் செயலை முதல் தடவையாகச் செய்து ஏனைய தொழிற்சங்கங்களுக்கும் முன்னேடியாக விளங்கும் காங்கிரஸின் பணி மகத்தானது! மகோன்னதமானது!! படித்த வாலிபர்கள் பெற்றேருக்குப்பாரமாய் இருந்துவரும் நிலைமாற, வேலையில்லாத்திண்டாட்டத்திலிருந்து படித்த வாலிபர்கள் விடுபடவேண்டியது மிகவும் அவசியமானது இவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் இ தொ கா. லிமிட்டெட்டுக்கு இருக்கும் என நம்புகிறேம்.

தோட்டவேலைகளில் மாத்திரம் சிரத்தை கொண்டிருந்த காலத்திலிருந்து நாம் விடுபட்டு பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெற்றவர்களாக மாறக்கூடிய சூழ்நிலையை இ தொ கா லிமிட்டெட் உருவாக்கி, அதன் மூலம் கைத்தொழில் உற்பத்தியிலும், ஏனைய துறை தொழில்களிலும், நமது சமூகம் முன்னேற வழிவகுத்துக் கொடுக்க வேண்டுமென காங்கிரஸைக் கேட்டுக் கொள்ளுகிறேம்.

தோட்டம்வாழ் தொழிலாளப் பெருமக்கள் தம் தேசியப்பற்று ஏனைய மக்களுடைய தேசியப்பற்றுக்கு சளைத்ததல்ல! நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதி வருவாயைத் தேடிக்கொடுக்கும் இச்சமூகம், இன்றைக்கும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்ற பொழுதிலும் தங்களின் சரீர சக்தியை ஈந்து, உழைப்பதிலேயே மூழ்கியிருப்பதொன்றே அவர்களது தேசியப்பற்றை எடுத்துக் காட்டப் போதுமானது.

உணவு உற்பத்தியிலும், சாலைகள் அமைப்பதிலும் பாலங்கள் கட்டுவதிலும் போன்ற எண்ணற்ற துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டு மற்றவர்களைவிட மலையக வாலிப சமுதாயம் சிரமதானத்தில் சிந்தையைச் செலுத்தவேண்டும் ஆண்டுக்கு ஒருமுறையாவது மலையகம் வாழ் இளைஞர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஓரிடத்தில் கூடி சிரமதானப் பணியைச் செய்யவேண்டும். இதன்மூலம் நாட்டுக்கு நல்லதோர் பணியைச் செய்தவர்களாவோம். இந்தப் பணிக்கு உடன்பட்டு ஆர்வம் காட்டுமாறு உற்சாகத்துடன் உங்களை அழைக்கின்றேன்.

## "காந்தியை பின்பற்றுக"

ஊரதீவு, வியாழன்

அண்ணல்காந்தியைப் பின்பற்றி, அவர் போதித்த அகிம்சா தர்மத்தின்படி நமது சமுதாயம் ஒழுகுமாயின், நல்லொக்கமும் பண்பாடும் மிக்க நாடாக நமது நாடு திகழும்.

இவ்வாறு-புங்குடுதீவு வல்லன் கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட காந்தி நூற்றூண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தீவுப் பகுதிக காரியாதிகாரி திரு எஸ். விஞயகலிங்கம் குறிப்பிட்டார். விழாவுக்கு முன்னர் பனை, தென்னை முதலிய மரங்கள், வல்லன் கிராம முன்னேற்றச்சங்க முன்திடலில் நாட்டப்பட்டன.

புங்குடுதீவு கிழக்குக் கிராமசேவையாளர் திரு. சந்திரசேகரம், தீவுப்பகுதி கிராம முன்னேற்ற அதிகாரி திரு. ஏ. வி. இராசகுலசிங்கம், தீவுப்பகுதி விவசாயப்போதனசிரியர் நடேசன் ஆகியோரும் விழாவில் பேசினர்.

## தேசிய இளைஞர் இயக்கம்

நெடுந்தீவு, வியாழன்

தேசிய இளைஞர் இயக்கத்தில் இங்கு நூற்றுக்கதிக மானவர்கள் சேர்ந்துள்ளார்கள் படித்தவாலிபர்களும் பெண்களும் சேர்ந்துள்ள இவ் வியக்க வேலைத்திட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கிறது, அதற்கான படப்பிடிப்பும் ஏற்கறவே நடைபெற்றுள்ளது. புதிதாக இன்னும் சேருவதற்கு இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருகிருர்கள். முதல் 150 பேர் மட்டும்தான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாவலர் கட்டுரைப் போட்டி

## விவசாயி கொலை

பொலநறுவ, வியா.

வயல் சம்பந்தமாக எழுந்த தகராறில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். பொலநறுவையில் நடைபெற்ற இச் சம்பவத்தைத் தொடர்ந்து இருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.


### வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
எம் ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பறக்கும் பாவை**
(ஈஸ்மன் கலர்)

### ஸ்ரீ காலிங்கா

இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**அரசகட்டளை**

வல்வெட்டித்துறை

### றஞ்சனு தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த
**குழந்தைக்காக**

### ராஜா

(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P. M
Jayne Mansfield
Juliet Prowse
in
'SPREE'
(color)
(Strictly for Adults)

### REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45p m.
Poya, Prepoya 4 Shows
Jean Marias
in
THE SAINT AGAINST
AGENT 00

### MANOHARA

JAFFNA
Daily 4-45, 7 00 & 9-45pm
Poya Prepoya 10-30 a. m.
THE ELUSIVE
AVENGERS
(Scope-color)


## "மக்களே செய்ய வேண்டும்"

முசலி, வியாழன்

''பண்டைக்காலத்தில் ஒரு நாட்டின் சிற்றரசன் ஒரு குளமோ, பாலமோ, தெருவோ, நிர்ணயிக்க வேண்டுமென்ருல், இராசகாரிய முறையில் தனது பிரசைகளுக்கு அறிவிக்க, அந்த அறிவித்தலை மக்கள் தெய்வீக அறிவித்தலாகக் கருதி, அதைச்செய்வார்கள். ஆனுல் இன்று ஒரு பாலமோ, குளமோ, தெருவோ, நிர்ணயிக்க வேண்டுமென்ருல், அரசாங்கத்திடம் பல முறை இரந்து நிற்க வேண்டியிருக்கின்றது. இந்த முறைமாறி மக்கள் எல்லாம், தங்கள் தங்கள் கிராமிய வேலைகளைத்தாங்களே செய்ய முன்வர வேண்டும்'' என நாஞட்டான்மேற்குகிராமச் சபை பல ரூபா செலவில் அமைத்த பள்ளன் கோட்டை பாலத் திறப்பு விழாவின் போது மன்ஞர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வீ, ஏ. அழகக்கோன் கூறினர்

## புதிய வீதி

நெடுந்தீவு, வியாழன்

கடந்த சூறுவளியால் தூர்க்கப்பட்டு, நெடுந்தீவு கிழக்கு தீத்தக்கரை-கடற்கரை வீதி பொதுமக்களால் பயன்படுத்த முடியாமல்போகவே பொது மராமத்து இலாகினர், பொதுமக்கள் இலவசமாக வழங்கிய நிலங்களினூடாகப் புது வீதியொன்றை அமைத்து வருகின்றனர்.

## கந்த புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்ஞகம் பட்டினசபை மைதானத்தில் பட்டினசபை நூல் நிலைய ஆதரவில் இயங்கும் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் நாளை மாலை ஆறு மணிக்கு தற்காலிக ஓடிட்டர் ஜெனரல் திரு ஆ. குணநாயகம் கந்தபுராண பாராயணத்தால் நான் பெற்ற அனுபவம் எனும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

சைவப்புலவர் மணி த. குமாரசாமிப்பிள்ளை தலைமை தாங்குவார்


### வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா நாகேஷ்
நடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7 மட்டும்) வ. வி. 52-50 ம. வி. 45/-

டயரூம்ஸ்,

54, 60, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.

திகதிகளில் நடைபெறும். இக்காட்சியை மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் ஆரம்பித்து வைப்பார்.

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-18 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ.
பகல் 12-00 செய்திசுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாணவர்மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.
மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 சித்திரம், 7-35 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-10 வயலின், 10-30 செய்திச்சுருக்கம்.

## உதைபந்தாட்ட முடிவுகள்

புத்தூர், வியாழன்

யாழ். விளையாட்டுச்சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் 'ஸி' பிரிவில் பரமேஸ்வராக்கல்லூரி கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தை 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. ரி. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப்போட்டியில், கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் 1-0 கோலால்பரமேஸ்வராக்கல்லூரியை வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. ரி. வில்வராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## 'அம்பிப் பாடல்' வெளியீட்டு விழா

கொழும்பு, வியாழன்

கவிஞர் 'அம்பியன்' 'அம்பிப்பாடல்' வெளியீட்டு விழா வரும் சனிக்கிழமை திரு. ஜனுப். ஏ. எம். ஏ. அஸீஸ் தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. க. இராமநாதன் முதற்பிரதியை வாங்கும் இவ்விழாவில் திரு. இ. இரத்தினம், திரு. செ. நடராசா, கலாநிதி. க. கைலாசபதி ஆகியோர் உரையாற்ற விருக்கிறார்கள். திரு. லடீஸ். வீரமணியின் வில்லுப்பாட்டும் இடம்பெறுகிறது.

எடுத்துக் காட்டப் போது ... மானது.

உணவு உற்பத்தியிலும், சாலைகள் அமைப்பதிலும் பாலங்கள் கட்டுவதிலும் போன்ற எண்ணற்ற துறை ... செய்தவர்களாவோம். இந்தப் பணிக்கு உடன்பட்டு ஆர்வம் காட்டுமாறு உற்சாகத்துடன் உங்களை அழைக்கின்றேன்.

## நாவலர் கட்டுரைப் போட்டி
## 1000 ரூபா பெறுமதியான பரிசுகள்
## முடிவு திகதி 10-11-69

நாவலர் பெருமானைப்பற்றிய சிந்தனையை மாணவர்கள் மத்தியில் தூண்டுவதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை நாவலர் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்துகின்றது.

முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு ஒவ்வொரு தங்கப்பதக்கமும், ரொக்கப் பணமாக முறையே ரூபா 100, ரூபா 75, ரூபா 50 ஆகிய தொகைகள் பரிசுகளாக அளிக்கப்படும். இவை தவிர மற்றும் 10 கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசுகளாக தலைக்கு ரூபா 25 பெறுமதியுள்ள புத்தகப் பரிசுகள் வழங்கப்படும். இப்பரிசுகள் நாவலர் குருபூசையன்று அளிக்கப்படும்.

### கட்டுரைக்குரிய தலைப்பு:

(அ) நாவலர் பிறந்திலரேல் ......................
(ஆ) சமய மறுமலர்ச்சியின் விடிவெள்ளி.
இ) நாவலரும் நாமும்.

இவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி எழுதலாம்.

### முக்கிய நிபந்தனைகள்

1. 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. கட்டுரை 'புல்ஸ்காப்' தாளில் 6 பக்கங்களுக்கு மேற்படக்கூடாது.
3. கட்டுரையுடன் கீழ்க்காணப்படும் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி 10-11-69க்கு முன் அனுப்ப வேண்டும்.
4. கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி: அமைப்பாளர், நாவலர் கட்டுரைப் போட்டி, 110, ஹல்ஸ்டப் வீதி, கொழும்பு-12.

### நாவலர் கட்டுரைப் போட்டி — 1969
விண்ணப்பப் படிவம்

இணைத்துள்ள
கட்டுரையின் தலைப்பு ......................
எழுதியவரின் பெயர் ......................
வயதும், பிறந்த திகதியும் ......................
வகுப்பு......................
பாடசாலை ......................

அமைப்பாளர்,
நாவலர் கட்டுரைப் போட்டி,
110, ஹல்ஸ்டப் வீதி,
கொழும்பு-12.

ஐயா,


மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கட்டுரை எனது சொந்தத் திறமையால் எழுதப்பட்டதென்றும் வேறு எங்காவது பிரசுரிக்கப்படாததென்றும் உறுதியளிக்கின்றேன்.

திகதி..................

......................
மாணவர் கையொப்பம்.

இம்மாணவரால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்தவரை சரியானவை.

......................
அதிபர்/வகுப்பு ஆசிரியர்




ராணிக்கு ஒரு தோழி!

உங்கள் மேனியின் கட்டிளமைக் கவர்ச்சியைக் காத்து வரும் ராணி சந்தன சோப்புக்குத் தோழியாக விளங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் பவுடர் ராணி சந்தன டல்கம் பவுடர்.

தூய சந்தனத்தின் குளுமையையும் பொன் வண்ணப் பொலிவையும் உங்கள் மேனிக்கு நாள் முழுதும் தருவன-

ராணி சந்தன சோப், சந்தன டல்கம் பவுடர்.

இவை இரண்டும்
சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் தயாரிப்புகள்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா நாகேஷ்
நடித்த
அன்று கண்ட முகம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 8 காட்சிகள்]

சிவாஜி - நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

வெற்றிமுரசு கொட்டும் -வது வாரம்

கிங்ஸ்லி
(கொழும்பு)

பிளாஸா
(வெள்ளவத்தை)

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30, 9-30, போயா, பிரிபோயா 4 காட்சிகள்



★ ரவிச்சந்திரன்,
★ பத்மினி,
★ நாகேஷ்,
★ குமாரிசச்சு,

மற்றும் பலர் நடித்த
எங்களுக்கும் காலம் வரும்

கதைவசனம்: பாசுமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
பாடல்கள்: கண்ணதாசன்-வாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீன கொமாண்டோ நிலைகள் மீது லெபனுன் ராணுவம் பீரங்கி தாக்குதல்

## இருதரப்பிலும் மொத்தம் 26 பேர் பலியாகியுள்ளனர்

### அரபுநாடுகளில் பதட்டம்

பேருட், அக். 23

லெபனுனில் அரசாங்க படைகளுக்கும் பாலஸ்தீன கொமாண்டோ படையினருக்குமிடையில் கடுமையான சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

பாலஸ்தீனக் கொரில்லாப்படையினரின் முகாம்கள்மீது அரசாங்க காவல் படையினர் பீரங்கித்தாக்குதல்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதுவரை 20 பாலஸ்தீன கொமாண்டோக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் 6 அரசாங்கதரப்பு படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

பாலஸ்தீன கொமாண்டோப்படையினர்மீது லெபனுன் காவல்படையினர் தாக்குதல் ஆரம்பித்திருப்பது அரபுநாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியிருககின்றது.

**பிரதமர் ராஜினுமா**

லெபனுன் காவல்படைகளுக்கும் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்குமிடையில் நடைபெறும் சண்டை அரபுநாடுகளில் ஆத்திரத்தை மூட்டியிருப்பதால் பிரதம மந்திரி திரு கராம தமது பதவியை ராஜினுமாச் செய்துவிட்டார். அரசாங்கப் படைகள் தாக்குதல் நடத்துவதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை யென்று அவர் கூறியிருக்கிறார்.

திரு. கராம கடந்த ஏப்ரல் மாதமே தமது பதவியை ராஜினுமாச் செய்திருந்தார். பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கும் அரசாங்க காவல் படையினருக்கு மிடையில் நடைபெற்ற இரண்டுநாள் சண்டையில் 15 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர் அப்பொழுது ராஜினுமாச் செய்தார். புதிய மந்திரிசபை ஒன்றை அமைக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர் அப்படிச் செய்யாமல் இதுவரை காபந்து அரசாங்கத்தையே நடத்தி வந்தார். இப்பொழுதுமீண்டும் ஏற்பட்ட மோதல்களை...தப்பட்ட இடங்கள்மீது இஸ்ரேலியர் தொடராகத் தாக்குதல்களை நடத்திவந்திருக்கிறார்கள், யுத்த நிறுத்த எல்லைக்குக் குறுக்கே தொடர்ந்து தாக்குதல் நடக்குமாஞல் கடுமையான பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருந்தது. இதைத் தொடர்ந்து பேருட்டிலுள்ள அமெரிக்க தூதரகம் லெபனுனின் தேசிய ஆதிபத்தியத்துக்கு பெரிய ஆபத்து ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டது. இந்த அறிக்கை பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கு எதிராக லெபனுனைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் வெளியிடப்பட்டதாகக் கருதப்பட்டது

**சிரியா எல்லையை மூடியது**

பாலஸ்தீன கொமாண்டோக்கள்மீது லெபனுன் துருப்புகள் தாக்குதல் ஆரம்பித்திருப்பதால் சிரியா லெபனுனுடனுன எல்லையை மூடிவிட்டது. அத்துடன் பாலஸ்தீன கொமாண்டோக்கள்மீது லெபனுன் ராணுவம் நடத்தும் தாக்குதலை நிறுத்தாவிட்டால் சிரியா தகுந்த பதில்நடவடிக்கை எடுக்கவேண்டி யிருக்கும் என்று எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றது.

பாலஸ்தீன கொமாண்...

தமிழ் நாட்டில்

## வரட்சி நீங்கி வெள்ளம்

சென்னை, அக் 23

கடந்த பல மாதங்களாக வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்த செங்கல்பட்டுப் பகுதியில்இப்பொழுது கடுமையான வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது.

பாலாறும், வேதவதியில் பெருக்கெடுத்து ஓடுகின்றது. குமார் 400 ஏகர் நிலம்நீரில் அமிழ்ந்து போயிருக்கின்றது ஏராளமானவர்கள் வீடுகளை இழந்துள்ளதாகத் தெரிகின்றது போக்கு வரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பல இடங்களிலும் இப்பொழுதுமழை பெய்து கொண்டிருக்கின்றது.

## மே. ஜேர்மனியருக்கு சீனுவில் சிறை

ஹாங்காங், அக். 23

அமெரிக்காவுக்காக உளவுபார்த்ததாக மேற்கு ஜேர்மன் என்ஜினியர் ஒருவருக்கு சீனு 10 வருடம் சிறைத்தண்டனை விதித்திருக்கிறது.

நோபல் பரிசுக்கு

## இந்திய மந்திரிக்கு சோவியத்விருது

மாஸ்கோ, அக் 23

இந்தியப்பாதுகாப்பு மந்திரி திரு, சுவரண்சிங் மாஸ்கோவில் சோவியத் பிரதமர் திரு: கொஸிஜினுடன் 26 மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். இந்தப்பேச்சுக்கள் பற்றிய விபரம் அறிவிக்கப்படவில்லை ஆனுல் இந்தியத் தரப்பில் பெரிதும் திருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

திரு சுவரண்சிங்கிற்கு சோவியத் யூனியன் மாஸ்டர் ஆஃப்டால்ஸ் என்ற ராணுவப் பட்டத்தை வழங்கி கௌரவித்திருக்கிறது

திரு சுவரண்சிங் இன்று மாஸ்கோவிலிருந்து ஜோர்ஜியாவுக்குப் போகிறார். நாளைய தினம் அவர் மீண்டும் மாஸ்கோ திரும்புவார்.

சண்டிகார்பிரச்னை

## தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை ஆரம்பித்தார்

புதுடில்லி, அக். 23

சண்டிகர் மற்றும் இதர பிரச்னைகள் குறித்தும் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி பஞ்சாப்-ஹரியானு தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்த ஆரம்பித்திருக்கிறார்.

நேற்று மாலை பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர் பிரதமரைச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இந்த ஆலோசனைகள் ஆரம்பமாகின

**பெருமான் உடல் நிலை**

சண்டிகரை பஞ்சாப்புடன் சேர்க்கவேண்டும் என்று கோரி உண்ணுவிரதம் இருந்துவரும் சீக்கியத் தலைவர் தர்சன் சிங் பெருமானின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'கொமா' என்ற மயக்க நிலைக்கு முந்திய கட்டத்தில் அவர் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. திரு. பெருமான் 70-வது நாளாக நேற்று உண்ணுவிரதமிருந்தார்

## 'காந்தி வழியை மாணவர் பின்பற்ற வேண்டும்'

### சார்ள்ஸ் இளவரசர் கூறுகிறார்

லண்டன் அக் 23

இளைஞர்கள் மகாத்மா காந்திவழியைப் பின்பற்றுவதால் அமைதியான வாழ்வு வாழலாம் என்றும் குழப்ப நிலையில் சுமுகமான தீர்வு காண்பதற்கு காந்தியின் போதனை உதவமுடியும் என்றும் வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் இன்று காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு இங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து பேசுகையில் ...மிடையே இருந்த தூரத்தை குறைக்கமுயன்றவர் காந்திஜீ என்றுர் இரு சார்பினரையும் சமமாக மதித்து வாழ்ந்தவர் காந்தியென்றும் அவர் கூறினுர்.

இக்கூட்டத்துக்கு மவுண்ட்பாட்டன்பிரபு தலைமைதாங்கினுர்.

செய்திச்

## உடுப்பிட்டிக்கு தனிக் காரியாதிகாரி கந்தோர்

உடுப்பிட்டி, வியா.

'பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் கவனித்து தாமதமின்றிச் சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனே உடுப்பிட்டித் தொகுதிக்கெனஒருதனி காரியாதிகாரி அலுவலகம் நிறுவப்பட்டு உள்ளது. உடுப்பிட்டி பருத்தித்துறை தொகுதி மக்களின் தேவைகளை இதுவரை வடமராட்சிக் காரியாதிகாரி கந்தோரே கவனித்து வந்தது இதனுல் பொது மக்கள் மிகவும் கஷ்டமடைந்து வந்தனர் இப்புதிய காரியாதிகாரி அலுவலகத்தை உடுப்பிட்டித் தொகுதிமக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கவேண்டும்.'

மேற்கண்டவாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி யுமான திரு மு. சிவசிதம்பரம் கடந்த திங்கட்கிழமை காலை உடுப்பிட்டித் தொகுதிக்கான காரியாதிகாரி அலுவலகத்தை வதிரி வடசென்றல் பாடசாலைக்கு அருகில் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினுர்.

இப்புதிய உடுப்பிட்டித் தொகுதிக் காரியாதிகாரியாகத் திரு எஸ். ஜெயகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார் இவர் வடமராட்சிக் காரியாதிகாரியாக இதுவரை கடமையாற்றி வந்தார்.

## ராஜினுமா பற்றி கேரள முதலமைச்சர்

திருவனந்தபுரம், அக். 23

தாம் எதிர்க்கும் ஏதேனும் பிரேரணையொன்று சட்டசபையில் அங்கீகரிக்கப்படுமாஞல் தாம் தமது பதவியிலிருந்து ராஜினுமா செய்துவிடுவதாக கேரள முதலமைச்சர் திரு நம்பூதிரிபாத் சட்ட சபையில் தெரிவித்தார்.

வாக்கெடுப்புமுடிவிலேயே தமது நிலையை தீர்மானிக்க வேண்டுமென்றும் திரு. நம்பூதிரிபாத்எடுத்துக்கூறினுர்.

## பிரம்புத்தொழில் பாதிப்பு

சிலாபம், வியாழன்

சிலாப மாவட்டத்திலுள்ள கற்றவர்களும் கல்லாதவர்களும் ஈடுபட்டிருந்த பிரம்புக்கைத்தொழில் சமீபத்தில் மூலப்பொருளான பிரம்பின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தம்பகலை, மரதன்குளம், ஞானகெற்ற, கரவிற்ற போன்ற சில கிராமப்புறங்களிலுள்ள மக்கள் இம் மூலப்பொருளின் மையால் வேலைவாய்ப்பின்றிக் கஷ்டப்படுகிறார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிரமதானப் பணிகள் மூலம் தேசப்பணி ஆற்றுவோம்

## மலையக வாலிபர்களுக்கு வாலிபர் தலைவர் அழைப்பு

(சுப்பையா அரங்கு (இராமானுஜம் நகர்)

அட்டன், வியாழன்

தோட்டத்தொழிலாளர்களின் தேசப்பற்று வேறு எந்தச் சமூகத்தவர்களின்தேசப்பற்றுக்கும் எந்த வகையிலும் குறைந்ததல்லவென்று இராமானுஜம்நகர் சுப்பையா அரங்கில்வாலிபர் காங்கிரஸ் தலைவர் திரு, கே. இராமசாமி உரைநிகழ்த்துகையில் கூறினுர்.

மலையக வாலிபர்கள் உணவு உற்பத்திச் சாலைகள் அமைத்தல் பாலங்கள்போடுதல் போன்ற சமூக நலக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு சிரமதானப் பணியில் ஈடுபட முன்வரவேண்டும் என்றும் திரு. இராமசாமி வேண்டுகோள்விடுத்தார். அவர் மேலும் தமது ...தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்பதே எனது அவா.

**மதுஅரக்கனுக்கு சாவுமணி**

சமீபத்திலே காந்திமகான் பிறந்த நூற்றுண்டுவிழாவை சிறப்புடன் கொண்டாடினேம். அண்ணல் காந்திஜீயின் அஹிம்சா தத்துவத்தைக் கடைபிடித்தொழுகுங்கள் என பாரதப் புதல்வன் நேருஜீயின் சகோதரி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இலங்கை வந்து விடுத்த அறிவுரைகளைக் கேட்டிருப்பீர்கள். காந்தி மகாத்மாவின் புனிதப் போரில் ஒன்று மதுவிலக்காகும். மயக்கப் பொருளானகள்ளும், சாராயமும் நமது உழைப்பின் வருவாயைச் சூறையாடுவன. சிறப்புடன் திகழவேண்டியஎத்தனையோ குடும்பங்கள் குடியினுல் வருமானத்திற்குமிஞ்சிய செலவு செய்து, சதா வறுமையோடு போராடவேண்டி

( 2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அவர் அப்பொழுது ராஜினாமாச் செய்தார். புதிய மந்திரிசபை ஒன்றை அமைக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர் அப்படிச் செய்யாமல் இதுவரை காபந்து அரசாங்கத்தையே நடத்தி வந்தார். இப்பொழுது மீண்டும் ஏற்பட்ட மோதல்களை அடுத்து அவர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

### அதிபரின் வாக்குறுதி

பாலஸ்தீன கொமாண்டோ படையினர் லெபனனில் முகாமிட்டிருப்பதால் அங்கு இஸ்ரேலியர் அடிக்கடி தாக்குதல் நடத்திவருகிறார்கள் லெபனன் அதிபர் சார்ல்ஸ்கீவே பாலஸ்தீன கொமாண்டோக்களுக்கு ஆதரவளிப்பதாகக் கூறி லெபனனை விட்டுவெளியேறும்படி இந்த ஆண்டு முற்பகுதியில் கேட்டிருந்தார்

கடந்த சில மாதங்களாக தெற்குலெபனனில் கொமாண்டோ நிலைகள் என்று கருதப்பட்ட இடங்கள் மீது லெபனன் ராணுவம் நடத்தும் தாக்குதலை நிறுத்தாவிட்டால் சிரியா தகுந்த பதில்நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்று எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றது.

பாலஸ்தீன கொமாண்டோக்கள்மீது சிலசமயங்களில் ஒருபக்கம் லெபனன் படைகளும், மறுபக்கம் இஸ்ரேலியரும் இருமுனைத் தாக்குதல்களை நடத்துவதாக அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

### அரபுக்களுக்கு அழைப்பு

பாலஸ்தீன விடுதலை இயக்கம் அம்மானில் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் லெபனன் ராணுவம் பாலஸ்தீன கொமாண்டோக்கள் மீது நடத்தும் தாக்குதலை நிறுத்துவதற்கு இந்தப் பிரச்னையில் தலையிடும்படி அரபுநாடுகளைக் கேட்டிருக்கிறது.

# நாஸரின் அவசர வேண்டுகோள்

லெபனன் படைகளுக்கும் பாலஸ்தீனகொமாண்டோக்களுக்குமிடையில் பலத்த சண்டைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதைப் பல நாடுகள் கண்டித்திருக்கின்றன. இந்த விஷயத்தில் உடனே நேரடியாகத் தலையிடும்படி லெபனன் அதிபர் திரு. ஹாவேயை ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அப்துல் நாஸர் அவசரமாகக் கேட்டிருக்கிறார்

ஈராக் அசும் லெபனனுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது

லிபியா, லெபனனுடனான தனது ராஜீய உறவுகளை முறித்துக்கொள்ள முடிவு செய்திருக்கின்றது. லெபனனிலுள்ள தனது தூதுவரை லிபியா திருப்பி அழைத்திருக்கின்றது.

### இஸ்ரேல் மறுப்பு

இஸ்ரேலியர் யுத்தநிறுத்த எல்லையைக் கடந்து. லெபனன் கிராமம் ஒன்றை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை இஸ்ரேலியர் மறுத்திருக்கின்றனர்

### எகிப்து விமானம்

ஸைசனாய்ப் பகுதியில் எகிப்திய விமானம் இஸ்ரேலியர் வசமுள்ள பகுதிகளில் கடுமையான தாக்குதல் நடத்திவிட்டுப் பத்திரமாகத் திரும்பிவிட்டதாக எகிப்தியர் அறிவித்தனர்.

## பர்மிங்ஹாமில் நவராத்திரி விழா

லண்டன் அக். 23

இங்கிலாந்திலுள்ளபர்மிங்ஹாம் நகரில் முதன் முறையாக நவராத்திரி விழா இம்முறை கொண்டாடப்பட்டது. இம்மாதம் 17-ந் திகதி தொடக்கம்20-ந் திகதிவரை நடைபெற்ற இவ்விழாவில் பிரிட்டனின் பல பாகங்களிலிருந்தும் சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்துக்கள் கலந்து கொண்டனர்.

இவ் விழாவுக்கென விசேஷமாக கல்கத்தாவிலிருந்து வருவிக்கப்பட்ட 176 றுத்தல் எடையுள்ள துர்க்கை அம்மனின் விக்கிரகம் ஒன்றும், லக்ஷ்மி, சரஸ்வதி, விநாயகர், முருகனது விக்கிரகங்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அழகாக அலங்கரிக்கப்பட்ட விழாமண்டபத்தில் 'கொலு' வேற்றி வைக்கப்பட்டன. இங்கிலாந்திலுள்ள இராமகிருஷ்ண மிஷன் தலைவரது மேற்பார்வையில் விழாப் பூசைகள் நடந்தேறின.

இச்சமயச் சடங்குகளை பல பிரிட்டிஷ் சமூக பிரமுகர்கள் கண்டுகளித்தனர். 19ந்திகதியன்று அங்கு வந்திருந்த விருந்தினரை உபசரிக்குமுகமாகவிசேஷவைபவமொன்றும் இடம் பெற்றது.

ஹாங்காங், அக். 23

அமெரிக்காவுக்காக உளவுபார்த்ததாக மேற்கு ஜேர்மன் என்ஜினியர் ஒருவருக்கு சீனு 10 வருடம் சிறைத்தண்டனை விதித்திருக்கிறது.

நோபல் பரிசுக்கு

## டூப் செக்கின் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டதாம்

ஜெனிவா, அக். 23

1969-ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல்பரிசு செக்கோஸ்லவாக்கியாவின் சீர்திருத்தக் கொள்கையாளரும் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளருமான திரு அலெக்சாண்டர் டூப்செக்கிற்கு வழங்கப்படவேண்டும் என்று சிபாரிசுசெய்யப்பட்டிருந்ததாம்

இம்முறை சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்துக்கு சமாதானம் பரிசு வழங்கப்பட்டிருக்கின்றது.

35 தனிப்பட்டநபர்களின் பெயர்களும், 10 சர்வதேச நிறுவனங்களின் பெயர்களும் பரிசுக்காக இம்முறை சிபாரிசு செய்யப்பட்டிருந்தன அவைகளில் திரு. டூப்செக்கின் பெயரும் ஒன்று.

## யாழ்நகர மின்சார சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் மின்சார அபிவிருத்தி சம்பந்தமாக நாளை கொழும்பில் ஒரு மகாநாடு நடைபெறவிருக்கிறது இம்மகா நாட்டை காணி மின்சார அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு எம் சிறிகாந்தா கூட்டுகிறார்

யாழ்ப்பாணம் மேயர் திரு எஸ் நாகராசா, மாநகரசபை கமிஷனர் திரு ஏ. ரி சுந்தரம், மின்சார எஞ்சினியர், முன்னாள் காரியாலய உதவியாளர் திரு கந்தசாமி ஆகியோர் இம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இன்று கொழும்பு செல்கின்றார்கள்

## "வடிகால் அமைக்கவும்"

மன்னார், வியா

இரண்டு தினங்களாகப் பெய்த பெருமழையால் மன்னார் பட்டினம் வெள்ளக்காடாக நீர் தேங்கி நிற்கின்றது. பட்டினசபை இம்முறை தற்காலிகவடிகால்கள் அமைக்காததேஇதற்குக்காரணமாகும். இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கும்படி மக்கள் முன்னேற்றக்கழகம் பொது மக்கள் சார்பில் பட்டின சபையைக்கேட்டுள்ளது

வாழலாம் என்றும் குழப்ப நிலையில் சுமுகமான தீர்வு காண்பதற்கு காந்தியின் போதனை உதவமுடியும் என்றும் வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் இன்று காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் பேசுகையில், ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கு

## உற்பத்தியில் ஊக்கம்

கோப்பாய், வியாழன்

வலி கிழக்குப் பகுதியில் விவசாயிகள் உருளைக்கிழங்கு உற்பத்தியில் இம் முறை கூடிய ஊக்கம் காட்டுகின்றனர். இம்மாதப்பிற்பகுதியில் சுமார் 12,500 அந்தர் விதை உருளைக்கிழங்கு இப்பகுதி விவசாயிகளுக்கு அரசாங்கம் வழங்குமெனத்தெரிகிறது.

## பௌர்ணமி நாள் கலைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லொழுக்கச் சிறுவர்பரிபாலன சேவைத் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ். மாநகரசபையினர் வரும் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாண மேயர் திரு. சி. நாகராசா தலைமையில் மாலை6-30மணிமுதல்நடத்தவிருக்கும் பௌர்ணமி நாள் கலை விழாவில் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பெண்கள் தவில் வாசித்து நாதஸ்வரம் இசைக்க கே. தம்பிராசா குழுவினர் அளிக்கும் நாதஸ்வர இசைவிருந்து, யாழ். மத்திய கல்லூரி வழங்கும் இளஞ்சாரணர் அபிநய இசை, கல்வி நூற்றாண்டு விழாவில் முதல் பரிசு பெற்ற (இலக்கிய நாடகம்) 'பரதன்', வண்ணை நவீன குழந்தைப்பள்ளி வழங்கும் முறுக்கு நடனம், தலைமையுரை யாழ்ப்பாண மேயர் திரு. சி. நாகராசா, சொற்பொழிவு யாழ். மாவட்ட நீதிபதி திரு. எம். ஜமீல், கவிஞர் வி. கந்தவனம், கைதடி குருடர் செவிடர் பாடசாலை 'முன் செல்வோம்' அபிநய இசை, முத்துத்தம்பி வித்தியாசாலை கதாப்பிரசங்கம், பாண்ட் வாத்திய இசை வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், பெர்னும் பாடசாலை வழங்கும் தடியில் தாண்டவம், திருநெல்வேலி அண்ணா கலைக்கோவில் வழங்கும் 'விஜய சகோதரிகள்'. மற்றும் நடன நிகழ்ச்சிகள், யாழ். கவின் கலைமன்றம் மேடையேற்றும் 'சிங்கப்பூர் சிங்காரம்' (நகைச்சுவை நாடகம்)

வாழ்ந்தவர் காந்தியென்றும் அவர் கூறினார்.

இக்கூட்டத்துக்கு மவுண்ட் பாட்டன்பிரபு தலைமைதாங்கினார்.

# செய்திச் சுருக்கம்

### வேலைநிறுத்தப் பயமுறுத்தல்

கோட்டை, வியா

அரசாங்க அச்சகத்தைச் சேர்ந்த அச்சுக்கோப்பாளர் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாகப் பயமுறுத்தி வருகின்றனர். சம்பள முரண்பாடு காரணமாக இம்மாதம் 27-ம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் தாம் ஈடுபடவுள்ளதாக அச்சுக் கோப்பாளர் யூனியன் அறிவித்துள்ளது இவர்கள் வேலைநிறுத்லம்செய்யும் பட்சத்தில் 1970-ம் ஆண்டு கீழ் வகுப்புகளுக்கு வேண்டிய பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் தாமதம் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது

0 0 0

### அமைச்சிடம் வற்புறுத்து

மூதூர், வியா.

மூதூரிலுள்ள அல்லைக்குடியேற்றத்தின் வலது வாய்க்காலை இளக்கந்தைக்குளத்துடன் உடனேஇணைக்கவேண்டுமென மூதூர் ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத் காணி அபிவிருத்தி அமைச்சிடம் வற்புறுத்தியுள்ளார்.

0 0 0

### வீதியில் கிடந்த சிசு

மோதர, வியா.

முகத்துவாரம் சென்ஜேம்ஸ் வீதியில் சிசு ஒன்று அனாதரவான நிலையில் கிடக்கக் காணப்பட்டது இதுசம்பந்தமாக இளம் பெண்ஒருவரை முகத்துவாரம் பொலிசார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். பொலிசாரினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டசிசு நேற்றுக்காலைஇறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

0 0 0

### பணம்கிடைக்காததால் தற்கொலை

செலவுக்குப் பணம்தரும்படி தாயிடம் கேட்டு அது கிடைக்காததால் 22 வயது வாலிபர் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கல்முனைப் பகுதியைச் சேர்ந்த சம்மாந்துறையில்நடைபெற்றுள்ளது,

உணவு உற்பத்திச் சாலைகள் அமைத்தல பாலங்கள்போடுதல் போன்ற சமூக நலக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு சிரமதானப் பணியில் ஈடுபட முன்வரவேண்டும் என்றும் திரு. இராமசாமி வேண்டுகோள்விடுத்தார். அவர் மேலும் தமது உரையில் கூறியதாவது:

றப்பர் மரப்பாலின் சுரப்பைப்போல, ஆர்வமும் ஆற்றலும் சுரக்க மலையக இளைஞர்கள் நமதுஸ்தாபனத்தின் ஜீவசக்தியாய் விளங்குகின்றனர். இந்த நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காகதேசிய ரீதியில் முற்போக்கு அரசாங்கத்தை உருவாக்க மற்ற இளைஞர்களின் இலட்சியத்திலும் பார்க்க, மலையகஇளைஞர்கள் நாட்டுக்கும், நாட்டின் வருவாய்க்கும் பெரும் சேவை செய்திருக்கின்றனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. தீய சக்திகளின் மாய வலைக்குள் விழாமல், உயர்ந்த ஜனநாயக வழியில் ஒன்றுபட்டு முன்னேறவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தினர் பெருக்கத்தால் பீடு நடைபோடவும்கூடிய வலிமையை உருவாக்கிய உங்கள் தீரத்தையும், வீரத்தையும் வியந்து பாராட்டுகிறேன். விடுதலை வேட்கையும், காலனி ஆட்சிமுறையை வீழ்த்தவும், பிற்போக்குவாதிகளை விரட்டவும் கூடிய சிறந்த காரியங்களைச்செய்துகொண்டிருக்கும் உலகம் வாழ் இளைஞர் சமுதாயத்தின் வீரச் செயல்களை இன்று காண்கின்றோம். அதே நேரத்தில் சீரிய முறையில் செயல்படத் துடிக்கும் இளங்காளைகளை, மயக்கும் வண்ண மொழிகளால் மடக்கி தீங்கான பாதையில் அழைத்துச் செல்லும் தீய சக்திகளிடமிருந்து, அவ்விளைஞர்களை மீட்பதும், இளைஞர்கள் தம் பெருங்கடனில் ஒன்றாகும்.

### ஒற்றுமைக்கு வழி என்ன

இளைஞர்களுக்கிடையே ஏற்படும் வேற்றுமைகளை களைந்து, ஒன்றுபட்ட சமூகமாக வாழ ஒவ்வொருவரும் தம்மாலான தொண்டினைச் செய்தேஆக வேண்டும். ஒவ்வொரு தோட்டத்திலும் இளைஞர்கள் அனைவருமே ஐக்கியப்பட்டு இருக்கிறார்களா? அவ்வாறில்லாமைக்கு என்ன காரணம்? அவர்களையும் ஒன்றுபடுத்த வழிமுறை என்ன என்பதனைச் சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்த்து தம்மையே திருத்திக்கொள்ளும் வழியையும் பின்பற்றவேண்டும் நமது சமூகத்தைப்பாதிக்கும் சீர்கேடுகள் எவை என்றும், அதை எவ்வாறு அகற்றுவது என்பதையும் நமது இயக்கம் ஆராய்ந்து, ...வேண்டுமென்பதே எனது அவா.

### மது அரக்கனுக்கு சாவுமணி


சமீபத்திலே காந்திமகான் பிறந்த நூற்றாண்டுவிழாவை சிறப்புடன் கோண்டாடி உழைப்பின் வருவாயைச் சூறையாடுவன. சிறப்புடன் திகழவேண்டியஎத்தனையோ குடும்பங்கள் குடியினால் வருமானத்திற்குமிஞ்சிய செலவு செய்து, சதா வறுமையோடு போராடவேண்டி

(2-ம் பக்கம் பார்க்க)

கோள்ளை நயம்!

இதோ!
மாதத்துக்கு
ஆக
ரூ.25/-உம்
சிறு தொகை வைப்புப்
பணமும் கொடுத்தால்
உங்களுடையது.

உஷா தையல் மேஷின்



உஷா தருவது விருப்பப்படி தெரிந்தெடுக்கப் பல்வேறு ரகங்கள். உஷா நீண்டகால பாவனைக்கு உறுதியாக உருவானது. உஷா திட்டமாக செயலாற்ற தொழில் நுட்ப நுணுக்கத்துடன் அமைந்தது. உஷா விற்பனையின் பிற்பட்ட சிறந்த பராமரிப்புச் சேவை தருகிறது. தளராத நம்பிக்கையுடன் வாங்குவதற்கு உஷா இன்றே முன்பணம் ஒன்றைக் கட்டி உங்கள் உஷா மெஷினை வாங்குங்கள்.

அருகேயுள்ள உஷா வியாபாரியிடம் விபரங்களைக் கேளுங்கள்.

சிறந்ததை வாங்குங்கள்: உஷா
எல்லாவற்றிலும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அன்பு ஒருபோதும் உரிமைகொண்டாடாது. அது எப்போதும் கொடுத்துக்கொண்டிருக்கும். அன்பு எப்போதும் துன்புறும். ஒருபோதும் ஆத்திரப்படாது. ஒருபோதும் பழிக்குப்பழிவாங்காது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 8-ந் திகதி (24-10-69)


## ஒரு விளக்கம்

சிங்களம் படிப்பது விஷயமாக சமீபத்தில் 'ஈழநாடு' எழுதியிருந்த தலையங்கம் பற்றி சில வட்டாரங்களில் சில தவறான கருத்துக்கள் நிலவுவதாகத் தெரிவதால் அதைப்பற்றி விளக்கவேண்டியது அவசியமாகின்றது

இதுகுறித்து விளக்குமுன் மொழி விஷயமாக 'ஈழநாடு' ஆதிமுதல் பின்பற்றிவரும் ஓர் அடிப்படைக் கொள்கையை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். தமிழும் சிங்களமும் இலங்கையின் இரு அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டுமென்று 1944-ம் வருடம் முதல் தேசபிதாவான திரு. டி எஸ் சேனநாயகா அரசியல்ஞானத்துடன் கைக்கொண்டுவந்ததும் பத்து வருடங்களுக்கு மேல் அமுலில் இருந்துவந்ததுமான கொள்கையே நீடித்திருக்கவேண்டுமென்பதே நமது அசைக்கமுடியாத கருத்து, அதைமாற்றி சிங்களம் மட்டும் சட்டத்தைப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிவிட்டதை நாம் ஒருக்காலும் ஒப்புக்கொண்டதில்லை. என்றும் ஒப்புக்கொள்ளவும் முடியாது.

இந் நாட்டிலே தமிழரும் சரிசமமான பிரஜையாக வாழவேண்டுமாயின் அவர்களது மொழிக்கு முன்னிருந்ததுபோல் அரசியல் அந்தஸ்து அளிக்கப்படவேண்டுமென்பதில் நமக்குச் சிறிதளவும் ஐயமில்லை. தமிழ்த் தலைவர்களும், கட்சிகளும் தமிழரின் உரிமைக்காகப் போராட்டம் நடத்தினரென்றாலும், அது விரும்பிய பயனை அளிக்க முடியாமற்போயிற்று. இதனால் போராட்டம் முடிந்துவிட்டதாகவோ, தமிழர் தனிச் சிங்களச் சட்டத்தை மனமுவந்து ஒப்புக்கொண்டுவிட்டதாகவோ யாரும் கருதினால் அது தவறாகும். தமிழர் தங்கள் இழந்த மொழி அந்தஸ்தை மீண்டும் பெற்றால்தான் இந்நாட்டிலே முதல்

பொதுமக்களும் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர். அரசாங்க சேவையிலிருந்த தமிழ் ஊழியரில் பலர் மொழிச்சட்டம் காரணமாக வேலையிலிருந்து விலகினர். அரசாங்க உத்தியோகம்பெற விரும்புபவர்கள் கட்டாயமாகச் சிங்களம் படிக்கவேண்டுமென்ற நிபந்தனையை தமிழ்அரசியல்கட்சிகளும், தலைவர்களும் சரியாகவோ தவறாகவோ ஒப்புக்கொண்டுள்ளனரெனினும், சிங்களம் படிக்கவேண்டியதைப் பற்றி அக் கட்சிகள் தெளிவாகத் திட்டமாக எதுவும் இதுவரை கூறவில்லை. இன்று பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கும் பெரும்பான்மையான மாணவ மாணவிகளின் நோக்கமும் அரசாங்க உத்தியோகமாயின், அந்த உத்தியோகத்துக்கு ஒரு முக்கிய நிபந்தனையான சிங்கள மொழியை இஷ்டபாடமாகவும் தமிழ்ப்பிள்ளைகளுக்குப் போதிக்க எவ்வித ஒழுங்கும் செய்யப்படவில்லை. இந்த நிலையில் தமிழ் மாணவர் தங்கள் எதிர்காலம் பற்றி திகைத்து மனமுடைந்திருப்பின் அதில் வியப்பில்லை.

"இந்த நிலைமையைப்பற்றி தமிழ்மக்களும் தமிழ்த் தலைவர்களும் ஆலோசித்து விவேகத்துடனும் அரசியல் ஞானத்துடனும் உண்மை நிலைக்கு ஏற்றவாறும் காரியங்கள் செய்வரென்றே நம்புவோம்" என்று "வேலைவாய்ப்பும் சிங்களமும்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். முக்கிய தமிழ்க்கட்சிகளும் தலைவர்களும் இதுபற்றி வாய்மூடி மௌனம் சாதிப்பதைக் கலைத்து, அவர்களைச் சிந்திக்கச்செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்பதே அந்தத் தலையங்கத்தின் நோக்கம். இதில் ஏதும் தவறுண்டா?

யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கடுகளவுமில்லை. தமிழ் வாலிபர்களுக்குத்

## ஆட்சிமன்றத்திலே

# பூசாரிப்பூச்சாண்டி

நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்

'தி. மு. க. பொதுச்செயலாளர் இளஞ்செழியன் யாழ்ப்பாணத்திலே மாநாடு நடத்தி, அதில் 'கொரில்லாப்படை தொடங்கவேண்டும். பொலிஸ் நிலையங்களைத் தாக்கித் தகர்த்து ஆயுதங்களைக் கைப்பற்றவேண்டும். தனித்தமிழ் ராஜ்யம் நிறுவவேண்டும் என்பதை ஒருபுறம் பேச, மறுபுறத்திலே இந்தியாவிலிருந்து வந்த 'பூசாரி' யொருவர் 'தமிழ் இளைஞர்களே எழுச்சியடையுங்கள் இலங்கையில் தமிழ்க்கொடி நாட்டுங்கள்' என்று பேசிவிட்டுச் செல்ல, இப்படியான ராஜத்துரோகப் பேச்சுக்களைப் பேசியவர்கள் மீது வழக்குத்தொடர்ந்து அவர்களை நீதிமன்றத்தின் முன் இழுத்துச்செல்லாமல் பூசாரிக்கு இலங்கையில் நஞ்சு கொடுக்கப்பட்டதா இல்லையா என்பதைப் பற்றி தீவிரமாக விசாரணை செய்வதில்தான் நமது பொலிஸ் இலாகா ஈடுபட்டிருக்கிறது'

இப்படி ஒருவர் அங்கலாய்த்துக்கொண்டார் என்றால், அதிலும் ஆட்சிமன்றத்திலிருந்து கொண்டிருந்தாரென்றால் அது வேறு யாராகத்தான் இருக்கமுடியும். சாட்ஷாத் ஆர். ஜி சேனநாயக்காதான்

செனட்சபைக்குத் தங்கள் தங்கள் வேட்பாளர்களைப் பொறுக்குவதில் - அந்தப் போட்டியில் எதிர்க்கட்சியினரும் அரசாங்கத்தரப்பினரும் சபைக்கு வெளியே வெகு மும்முரமாக ஈடுபட்டிருக்க மூன்றுவார இடைவெளிக்குப்பின்கூடிய ஆட்சிமன்றத்தின் ஆசனங்களில் பெரும்பாலானவை- பெரும்பாலான நேரம் காலியாகவே காட்சியளித்தன.

பகல் 2 மணியிலிருந்து இரவு 7 மணிவரை ஒரே 'டல்'லாகத்தான் சபை நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து அரசாங்கத் தரப்புக்கு மாறிய கிரியெல்லை எம். பி. திரு. ரி. பி. விஜயசுந்தரா சரியான நேரம் பார்த்து, 2-32 க்கு மற்றெல்லா எம். பி. க்களும் வந்து தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்த பின்னர் சபையில் அமைதியாக பிரதான வாயில் வழியாக நுழைந்தபோது, அரசாங்கத்தரப்பினர் பலமாகக் கைதட்டி அவரை வரவேற்கத்தவறவில்லைத்தான்.

ஆனால் நேற்றைய செனட்டர்கள் தேர்வு கூட்டில் ரி பி. விஜயசுந்தரா போன்ற முக்கிய எம். பி. ஒருவரின் மனமாற்றமும், இடமாற்றமும் கூட வழக்கமான சலசலப்பை ஏற்படுத்தவில்லை. இதனால்தானோ என்னவோ,

டும் என்றெல்லாம் பேசியிருக்கிறார் என்று பிரஸ்தாபித்துவிட்டு திடீரென்று சிவபூசைக்குள் கரடியைப்புகுத்திய மாதிரி தமிழ் நாட்டிலிருந்து ஒரு சமயப் பூசாரி வந்து இங்கே, "தமிழ் இளைஞர்களே எழுச்சியடையுங்கள்; இலங்கையில் தமிழ்க் கொடி நாட்டுங்கள்" என்று பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

இப்படியெல்லாம் இவர்கள் பேசியதன் பின்னர், இவர்களது பேச்சுக்கும், எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லைஎன்று தமிழ்நாடு அரசாங்கம் அறிக்கைவிடும் அல்லது இவர்கள் இப்படிப் பேசியதற்கு தமிழ்நாடு அரசாங்கம் மன்னிப்பு கேட்கும் என்று ஆர். ஜி. எதிர்பார்த்தாராம்!

ஆனால் ஆர். ஜி. ஆச்சரியப்படத்தக்கதாக வருத்தப்படத்தக்கதாக தமிழ்நாடு அரசாங்கம் அப்படியெதுவுமே செய்யவில்லையாம்.

ஆர். ஜி. யை வருத்திய விஷயம் தமிழ்நாடு அரசாங்கம் மன்னிப்பு கேட்காததோ, மறுப்பு அறிக்கை விடாததோ அல்ல.

குன்றக்குடி அடிகளாரை ஆர். ஜி. 'பூசாரி' என்றுதான் குறிப்பிட்டார் பிரதமர் டட்லி கூட, ஒரு சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டு "கவ்த பூசாரி? ("யார் அந்தப் பூசாரி?") என்று கேட்க "குன்... றக்... குடி... அடி... கா...!" என்று ஆர். ஜி. சிங்களத்தில் எழுதிவைத்திருந்த ஒரு துண்டை வாசித்து பதிலளித்தார்.

அந்தப்பூசாரியரைகொல்ல முயற்சி நடைபெற்றதா, இல்லையா என்பதுபற்றி இப்பொழுது பெரும் வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் நடைபெறுவதாகச் சொல்லி நமது பொலிஸ் இலாகாகூட இப்பொழுது பூசாரிக்கு (குன்றக்குடி அடிகளாருக்கு) நஞ்சூட்ட முயற்சி நடைபெற்றதா இல்லையா என்பது பற்றி தீவிரமாக விசாரணை நடத்திக் கொண்டிருப்பதுதான் ஆர். ஜி யின் நெஞ்சை உறுத்தியது

இந்தப் 'பூசாரி' இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றவுடன் தமிழ்நாடு முதலமைச்சரே டெலிபோன் செய்து "சௌக்கியமாக

வந்து விட்டீர்களா! உங்களுக்கு நஞ்சூட்ட முயற்சி நடைபெற்றதாமே?" என்று கேட்டார் என்றால் தமிழ்நாடு மேல்சபை உறுப்பினரான இந்தப் பூசாரிக்கும் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் இடையில் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறது பாருங்கள் என்று கேட்டு 'பூசாரி' (குன்றக்குடி அடிகளார்) அரசியல்செல்வாக்கு உடையவர் திமுக அபிமானி என்று நிலைநாட்ட முயன்றார் ஆர் ஜி

சரி, இவர்கள் தான் இப்படிப் பேசி விட்டார்கள் என்றால், அவர்களைத் தண்டிக்க, அவர்கள்மீது இளஞ்செழியன் மீதும் குன்றக்குடி அடிகளார் மீதும் வழக்குத் தொடர்ந்து அவர்களை நீதிமன்றத்தின்முன் இழுத்து வராதது ஏன்தான்என்பது ஆர் ஜி யின அடுத்தகேள்வி.

'இந்நாட்டவர்கள் சிங்களவர்கள் சிறு அறையில்கூடி ஏதாவது பேசினாலும் அவர்களைக் கைது செய்து விலங்கிட்டு வழக்குத் தொடர்ந்து பல மாதங்கள் மறியலில் அரசாங்கம் வைப்பதாகச் சொல்லி, புரட்சிச் சதி வழக்கில் ஈடுபட்டவர்களை நினைவு படுத்திய ஆர் ஜி. "சிங்களவர்கள் மீதுமட்டும் வழக்குத் தொடரத் தயங்காத அரசாங்கம் தமிழர்கள்மீது மட்டும் இந்தியாவிலிருந்து வருபவர்கள்மீது வழக்குத் தொடராது வாளாவிருப்பது ஏன்? என்று கேட்கத் தவறவில்லை.

இலங்கையில் தி. மு. க, பலமிக்க ஒரு ஸ்தாபனம் இல்லை ஆகவே அதைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லைஎன்றபொலிஸ் அறிக்கைகளும், பிரதமரின் பேச்சுகளும் ஆர். ஜி. யைத் திருப்திப் படுத்தவில்லை. தி. மு. க வைப்பலம் பொருந்தியவொரு ஸ்தாபனமாகக் கருதாததால்காமராஜருக்கு ஏற்பட்ட கதியை நினைவு படுத்தினார் ஆர். ஜி.

அகில இந்தியப் பிரமுகர், மகாவீரர் காமராஜ் நாடார் உலகமே எதிர்பார்க்காதபடி ஒரு இளம் பாடசாலை மாணவனிடம் பொதுத் தேர்தல் தோற்கடிக்கப்பட்டதைச் சொல்லி தி. மு. க. வை- அதன் பலத்தை அதன்திட்டங்களை அசட்டை செய்ததால்தான் அந்தப் பெரிது காமராஜ் நாடாரு

க்கே அந்தக்கதி ஏற்பட்டது என்று எச்சரித்தார் ஆர். ஜி,

அடுத்துபொலிஸ் இலாகா மீதும் பாய்ந்தார் பொலிஸ் இலாகா சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் பெரும்பாலானவை பிழையானவை என்பதுதான் ஆர் ஜி யின் வாதம். சேர் ஜோன் கொத்தலாவலைகூட, பொலிஸ் அறிக்கைகளை நம்பிப் பொதுத் தேர்தலை அதற்கான கால எல்லைக்கு முன்பு நடத்தியதால்தான் தோற்றுப்போனாராம்.

பொலிஸ் அறிக்கைகளை நம்பி சபைக்குச் சில தகவல்களைக் கொடுத்துவிட்டு பின்பு பிரதமரே அவற்றிற்காக மன்னிப்பு கேட்கவேண்டியிருந்தது என்று சொல்லி பொலிஸ் இலாகா அறிக்கைகளை மட்டும் முழுமையாக நம்பியிருக்காமல்வேறு வழிகளிலும் தி. மு. க. பற்றிப் பூரண விசாரணை நடத்தித் தக்கநடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது தான் ஆர். ஜி. யின் கோரிக்கை.

'இப்படி ராஜதுரோகப் பேச்சுக்களைப்பேசிக் கொண்டிருப்பவர்களை ஒரு முறை நீதிமன்றத்தின் முன் இழுத்துச் சென்றீர்களானால் அன்றிலிருந்து இவர்கள் இப்படியான பேச்சுக்களை விட்டுவிடுவார்கள்" என்று முடித்தார் ஆர் ஜி.

ஆர். ஜி. சேனநாயகா கிளப்பிய பிரச்னைக்கு டட்லி சேனநாயகா பதிலளிக்க எழுந்தார்.

ஆர் ஜி கிளப்பிய இரு பிரச்சனைகளைப் பற்றியும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருதாகவும் இளஞ்செழியன் விஷயமாகா அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனை பெறப்பட்டு அதன் அடிப்படையில் மேல் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகச் சொன்னார் டட்லி.

"பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடன் சும்மா உடனேயே வழக்குப்போடு என்று நான் உத்தரவிட முடியாதுஅதற்குரிய விதிகளை அனுசரிக்க வேண்டும். போதிய சாட்சியங்கள் சேகரிக்கவேண்டும் அதன் பின்னர் தக்கநடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார்டட்லி.

ஆசிரியருக்குக் கடிதம்

## சிங்களப் பரீட்சை சித்தியடைந்த பின்பும் தண்டனையா?

குறிக்கப்பட்ட சிங்களத் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்த பின்பும் புது அரசாங்க ஊழியர்கள் பலர் தண்டிக்கப்படுகிறார்கள் 701-ம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் புது அரசாங்க ஊழியர்களுக்கு 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் வரை சித்தியடைவதற்காக மூன்று வருடகால அவகாசம் கொடுக்கப்பட்டது சிங்களம் படிப்பதற்கேற்ற வசதியீனங்களாலும் தனிப்பட்ட கஷ்டங்களாலும் பல புதிய ஊழியர்கள் அந்த மூன்று வருடகால எல்லைக்குள் சித்தியடைய முடியாமற் போய்விட்டது என்றாலும் அவர்கள் தங்கள் முயற்சியினால் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும் 1969-ல் ஆண்டு மார்ச் மாதத்திலும் நடந்த இரண்டு பரீட்சைகளிலும் தேவையான தரத்தில் சித்தியடைந்திருக்கிறார்கள் இவ்விரு பரீட்சைகளிலும் சித்தியடைந்த புது ஊழியர்கள் தங்கள் நிறுத்தப்பட்ட சம்பள உயர்வு சேவை உறுதிப்படுத்தல், சேவை முதுமை சம்பந்தமாகத் தமது திணைக்களத் தலைவர்கள் மூலமாகத் திறைசேரிச் செயலாளருக்கு விண்ணப்பித்தும் இதுவரை அவர்களின் நிறுத்திவைக்கப்பட்ட சம்பள உயர்வு, சேவை உறுதிப்படுத்தல் சேவை முதுமை சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இதனால் பல ஊழியர்கள் 22-11-69-ல் நடைபெறவிருக்கும் நிறைவேற்று எழுது வினைஞர் வகுப்பு 2ந் தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உரிமையுடையவர்களாக இருந்தும் அனுமதி வழங்க மறுக்கப்பட்டுள்ளார்கள் இவர்கள் இதுவிடயமாக தங்கள் தொழிற் சங்கங்கள் மூலமாகவும் தமிழ் அரசியற்தலைவர்களை நேரில் கண்டும் அவர்களுக்கு எழுத்து மூலமாகத் தங்கள் இன்னல்களை விளக்கியும் எதுவித பலனும் அற்றுத் துன்புறுகிறார்கள்

அரசாங்க ஊழியர்களுக்கு நடாத்தப்படும் தகுதிகாண் சிங்களப் பரீட்சையின் தரம் கடுமையானது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள் தற்போதைய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஏதோ பெரிய சலுகை செய்வதாகக் காட்டி, முன்னைய அரசாங்கம் இருக்கும்போது வைத்த நான்கு பிரிவையும் மூன்றாகக் குறைத்துவிட்டு பரீட்சையின் தரத்தைக் கூட்டிப் பல ஊழியர்கள் சித்தி பெறுவதைக் கஷ்டமாக்கியுள்ளது இதுபற்றி வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு அ அமிர்தலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தும் இதுவரை பரீட்சைத் தரம் குறைக்கப்படவில்லை அப்படியிருந்தும் தங்கள் விடாமுயற்சியால் பரீட்சையிற் சித்தியடைந்தும், அரசாங்கம் கொடுத்த காலஎல்லை 1968-ம் ஆண்டு ஜூலை மாதத்துடன் காலவதியாகிவிட்டது என்ற ஒரே காரணத்தினால் இவ் ஊழியர்கள் சம்பளஉயர்வு, சேவை உறுதிப்பாடு, சேவை முதுமை அற்று நடைப்பிணம்போல் அரசாங்கசேவையில் இருக்கிறார்கள்,

சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையிற் சித்தியடைந்த பின்பும் சம்பள உயர்வு இல்லை- சேவைமுதுமை இல்லை பதவி உறுதிப்பாடு இல்லையென்றால் எதற்காகக் கஷ்டப்பட்டுச் சிங்களம் படிக்க வேண்டும் என்று புதியதமிழ் ஊழியர்கள் அங்கலாய்க்கிறார்கள்! பலஇன மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதாகப் பறைசாற்றும் தேசிய அரசாங்கம் சொல்வதொன்று செய்வதொன்றாக சித்தியடைந்த தமிழ் ஊழியர்களைத் தண்டிப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

பிரதமமந்திரி நிதிமந்திரி ஆகியவர்களின் கவனத்திற்கு தமிழ் அரசியற் தலைவர்கள்இவற்றைக் கொண்டு வந்து மேலும் இவ்வூழியர்கள் தண்டிக்கப்படா வண்ணம் சேவைமூப்பு, சேவை உறுதிப்பாடு ஆவன செய்வார்களெனத் தங்கள் மதிப்பிற்குரிய பத்திரிகை வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

க. தம்பிராசா
மன்னார்.

## பத்திரிகைகளுக்குப் பங்குண்டு

கோப்பாய், வியாழன் கூட்டுறவி யக்கவளர்ச்சியிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் பத்திரிகைகளுக்கு பெரும் பங்குண்டு. கோப்பாய் கி. ச. தலைவர் திரு.

கள் மத்தியில் விழிப்புணர்ச்சியின்மையாலேயாகும். இத்தகையதொரு நிலைமாறுவதற்கும், மக்களுக்கு இயக்கத்தின்நன்மையை அறிவுறுத்துதற்கும், பத்திரிகைகள் முக்கிய பங்கு வகிக்கவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுல் போராட்டம் முடிந்து விட்டதாகவோ, தமிழர் தனிச் சிங்களச் சட்டத்தை மனமுவந்து ஒப்புக்கொண்டு விட்டதாகவோ யாரும் கருதிஞல் அது தவருகும். தமிழர் தங்கள் இழந்த மொழி அந்தஸ்தை மீண்டும் பெற்ருல்தான் இந்நாட்டிலே முதல்தர பிரஜையாக அவர்கள் வாழமுடியும். அதுவரை அவர்கள் நிம்மதியாக இருப்பதற்கில்லை. தமிழரின் கட்சியில் நியாயமிருப்பதால், அது என்ருவது ஒருநாள் வென்றே தீருமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

இதற்கிடையே சில அரசியல் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக தனிச்சிங்களச் சட்டத்தை சில நிபந்தனைகள் மீது தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்று, அரசாங்கத்துடன் ஒத்துழைத்தனர். ஆனுல் அந்த நிபந்தனைகளை ஆளுங்கட்சி நிறைவேற்ற முடியாதநிலையில் தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப்

...திக்கச்செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்பதே அந்தத் தலையங்கத்தின் நோக்கம். இதில் ஏதும் தவறுண்டா?

யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கடுகளவுமில்லை. தமிழ் வாலிபர்களுக்குத் தமிழ்த்தலைவர்கள் சரியான தெளிவான வழி காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதிய அத் தலையங்கத்திலே சில சொற்களால் யாருடைய மனமும் புண்பட்டிருப்பின் அதற்காக வருந்துகிறேம். மொழி விஷயமாகச் செயற்பட்டு விட்ட பெரிய இமாலயத் தவறை நீக்கி, தமிழுக்கும் உத்தியோக அந்தஸ்து மீண்டும் கிடைக்க தமிழ்க்கட்சிகளும் தலைவர்களும் எல்லா முயற்சிகளையும் தளராமல் செய்ய வேண்டுமென்று திரும்பவும் வற்புறுத்துகிறேம்.

## பிரயாணிகள் பிரச்னை 'அதிகரிக்கும்'

உடுப்பிட்டி, வியாழன்

'அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட, யாழ்ப்பாணத்திலிருந்து புத்தூர்-ஆவரங்கால் பஸ் சேவையை நிறுத்துமாறு பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்தவர்கள் தொழிற் சங்க ரீதியாகத் தடை செய்ய முயற்சி செய்வது நல்லதல்ல. இதனுல் பிரயாணிகளின் பிரச்னை மேலும் அதிகரிக்கும்.'

இவ்வாறு கூறும் பிரசுரமொன்றை புத்தூர்-ஆவரங்கால் பஸ் பிரயாணிகள் வெளியிட்டுள்ளனர். இப் பகிரங்க பிரசுரத்தில் ஆவரங்கால் கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. க. சின்னத்துரை, திரு. ச. சண்முகம் (புத்தூர்கிழக்கு), புத்தூர் கிராமசபை உபதலைவர் திரு. ப. குகதாசன், புரக்டர் திரு. சு. அம்பலவாணர், திருவாளர்கள் க. இராசதுரை, பொ. சதாசிவம் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

அப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

இவ்வளவு காலமும் புத்தூர், ஆவரங்கால் பகுதி பிரயாணிகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யமுடியா மற்போன பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவை சேர்ந்தவர்கள் எங்கள் கஷ்டங்களை நீக்கவந்த யாழ். டிப்போ பஸ் சேவையை நிறுத்தி வைக்க முயற்சிப்பது வெறுப்பை ஏற்படுத்துகின்றது.

இ. போ. ச.வின் எல்லா டிப்போக்களும் ஒரே நிறுவனத்திற்குச் சொந்தமானதென்பதைப் பருத்தித்துறை டிப்போவினருக்கு ஞாபகப்படுத்த வேண்டியது பிரயாணிகளின் கடமை. எமது பிரயாணக் கஷ்டங்களை உணர்ந்து உடன் நடவடிக்கை எடுக்கமுன்வந்த இ. போ. ச. வடபிரதேச முகாமையாளருக்கு எமது நன்றியைப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

## 125 புதிய பஸ்கள்

கோட்டை, வியாழன்

இவ்வருட முடிவுக்குள் 125 புதிய பஸ்களை இ. போ. ச இறக்குமதி செய்யவிருக்கிறது.

இப்புதிய பஸ்களை இந்தியாவிடமிருந்து பெறுவதற்கான ஒப்பந்தமொன்று இவ்வாரமுற்பகுதியில் இ. போ. ச விஞல் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மன்ஞர், வியா

சுமார் 45,000 ரூபா செலவில் நாஞட்டான் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தாம்போதி உதவிக் காரியாதிகாரியிஞல் திறந்து வைக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வேற்கத்தவறவில்லைத்தான்.

ஆனுல் நேற்றைய செனட்டர்கள் தேர்வு சூட்டில் ரி பி. விஜயசுந்தரா போன்ற முக்கிய எம். பி. ஒருவரின் மனமாற்றமும், இடமாற்றமும் கூட வழக்கமான சலசலப்பை ஏற்படுத்தவில்லை. இதனுல்தானே என்னவோ, சம்பிரதாய பூர்வமான 'நான் ஏன் கட்சி மாறினேன்?' சொற்பொழிவுகூட அவசியமில்லை என்று விஜயசுந்தரா நினைத்துவிட்டார்!

மாலை 2 மணியிலிருந்து முக்கியத்துவமில்லாத பல உப விதிகளையும், துணைச்சட்டவிதிகளையும் சம்பிரதாய பூர்வமாக ஆட்சிமன்றம் விவாதித்துக்கொண்டிருக்க ஆட்சிமன்றக் கட்டிடத்துக்குள்ளேயே வெவ்வேறு இடங்களில் நடந்துகொண்டிருந்த எதிர்க்கட்சிகள் குழுக கூட்டத்திலும் அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்திலு செனட்டர்கள் தேர்வு - வேட்பாளர்கள் தேர்வு அதி உக்கிரமாக நடந்துகொண்டிருந்தன.

அண்மைக் காலங்களில் செனட்டர்கள் தேர்தலில் இவ்வளவு உற்சாகமும, ஆர்வமும் காட்டப்படவில்லை என்று அரசியல் அவதானிகள் கருதுகின்ற அளவுக்கு 'ஆட்களைப் பிடிப்பதற்கும்' பெரிய இடங்களில் தங்கள் தகைமைகளைப் பறைசாற்றுவதற்கும் இன்னேரன்ன விஷயங்களுக்கும் செனட்டர்களாகவிரும்புபவர்களும் அவர்தம் ஆதரவாளர்களும் அதிகாலையிலிருந்தே பகீரதப்பிரயத்தனங்களைச் செய்துகொண்டிருந்தனர்.

சலனமற்றிருந்த சபை நடவடிக்கைகளை தி. மு. க. என்று கல்லை விட்டெறிந்து சலனத்தை சலசலப்பை ஏற்படுத்தியவர் தம்பதேனியாப் பிரதிநிதி, சிங்கள மகாஜன பெரமுன தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்காதான்!

மூன்றுவார, இடைவெளிக்குப்பின் ஆட்சிமன்றம் கூடும் போதுமேலும் தி. மு. க. விவகாரத்தை ஆர். ஜி. கிளப்புவார் என்று எல்லோரும் எதிர்பார்த்ததுதான், ஆனுல் அவரோ யாரும் எதிர்பார்க்காதபடி குன்றக்குடி அடிகளாரையும் அவருக்கு நஞ்சூட்டும் முயற்சியையும் அம்பலத்துக்கு கொண்டுவந்துவிட்டார்!

ஒத்திவைப்புப் பிரேரணை மீது ஆர். ஜி. பேச எழுந்தபோது முதலில், தி. மு. க. பொதுச்செயலாளர் இளஞ்செழியன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டிலே கொரில்லாப் படை தொடங்குவதுபற்றியும், பொலிஸ் ஸ்டேஷன்களைத் தாக்கித்தகர்க்க வேண்டும்; அவற்றிலுள்ள ஆயுதங்களை அபகரிக்கவேண்

...நடத்திக் கொண்டிருப்பதுதான் ஆர். ஜி யின்நெஞ்சை உறுத்தியது

இந்தப் 'பூசாரி' இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றவுடன் தமிழ்நாடு முதலமைச்சரே டெலிபோன் செய்து ''சௌக்கியமாக

...மாணவனிடம் பொதுத் தேர்தல் தோற்கடிக்கப்பட்டதைச் சொல்லி தி. மு. க. வை- அதன் பலத்தை அதன்திட்டங்களை அசட்டை செய்ததால்தான் அந்தப் பெரிது காமராஜ் நாடாரு

...களை அனுசரிக்க வேண்டும். போதிய சாட்சியங்கள் சேகரிக்கவேண்டும் அதன் பின்னர் தக்கநடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்ருர் டட்லி.

### இன்று ஐக்கிய நாடுகள் தினம்

# சமாதான அடிப்படையில் உருவான உலக மகாசபை

இரண்டாவது உலக மகாயுத்தம் அமளியாக நடந்துகொண்டிருக்கும் போதே நான்கு வல்லரசுகளான பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா சியாங்காய் ஷேக்கின் சீனக் குடியரசும் 1943-ம் ஆண்டு ஒக்டாபர் மாதத்தில் மொஸ்கோவில் கூடி, யுத்தங்களை ஒழித்து உலகில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு சர்வதேச ஸ்தாபனம் அவசியம் என்பதைப் பிரகடனம் செய்தன. மொஸ்கோ பிரகடனம் என்று பெயர்பெற்ற இப்பிரகடனம், சமாதானம் விரும்பும் சகல நாடுகளும் ஒன்றுகூடி சர்வதேச அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்குக் கூடிய விரைவில் ஒரு சர்வதேச ஸ்தாபனம் அமைக்கவேண்டுமென்று வற்புறுத்தியது.

இதன்பிரகாரம் யுத்த மேகங்கள் முற்ருக வெளிக்கு முன்பே, 1945-ம் ஆண்டு ஏப்ரில் 25-ம் திகதி ஐம்பது நாடுகள் கொண்ட ஒரு மகாநாடு சான்பிரான்சிஸ்கோ நகரில் கூடி பூர்வாங்கமான ஏற்பாடுகளைச் செய்தது. இலங்கையின் சார்பாக தற்போது ராஜாங்க மந்திரியாயிருக்கும் திரு. ஜே. ஆர் ஜெயவர்தன இதில் கலந்து கொண்டார்.

உத்தேச சர்வதேச ஸ்தாபனத்துக்கு 'ஐக்கிய நாடுகள் சபை' என்று பெயரிட வேண்டுமென்று அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட் விரும்பியதை மகாநாட்டு பிரதிநிதிகள் 850 பேரும் ஏகமனதாக அங்கீகரித்தார்கள்.

இம் மகா நாட்டில்தான் ஐக்கியநாடுகள் சாஸனமும் உருவாகிற்று. சுமார் நாநூறு கமிட்டிகளும் கமிஷன்களும் கூடி அதன்ஷரத்துக்களை அலசி ஆராய்ந்து வெட்டித் திருத்தி முடிவாக்கின, சுமார் 1200 திருத்தப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. பல கருத்து வேறுபாடுகளும் கொள்கை வேற்றுமைகளும் ஏற்பட்டன. சில நெருக்கடியான சமயங்களில் மகாநாடு முறிந்துவிடுமோ என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு சபையில்வாக்களிப்பு முறையும் 'வீட்டோ' (ரத்து) பிரயோகமுமே காரசாரமான விவாதத்தைக் கிளப்பின. பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்குமிடையே நீண்ட வாக்குவாதங்கள் இதுபற்றி எழுந்தன. ஈற்றில் ஐக்கிய நாடுகள் சாஸனம் ஒருவாறு நிறைவேறியது,

அதன் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:- பின்வரும் சந்ததிகளை யுத்த அரக்கனிடமிருந்து காப்பாற்றுவதென்று ஐக்கிய நாடுகள் சபை உறுதிபூண்டிருக்கிறது அடிப்படையான மனித உரிமைகளில் நம்பிக்கை தளராதிருப்பது. உடன்படிக்கைகளையும் சர்வதேச சட்டங்களையும் கௌரவிப்பது. சமூக முன்னேற்றத்தையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் அடைய முயலுவது. அங்கத்துவ நாடுகள் பொறுமை காட்டி ஒன்ருேடொன்று இயைந்து வாழ்வது.

இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஐக்கியநாடுகள் சபையின்கீழ் ஆறு பிரதான ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன;- (1) பாதுகாப்பு சபை, (2) பொதுச் சபை, (3) பொருளாதார, சமூக ஸ்தாபனம், (4) தர்மகர்த்தா சபை. (5) சர்வதேச நீதிமன்றம், (6) நிர்வாக செக்ரடேறியட்.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு 1945.ம் ஆண்டு ஜூன் 26-ம் திகதி முடிவடைந்ததும் ஐக்கிய நாடுகள் சபையைக் குடியிருத்துவதற்கு ஓர் இடம் தேடவேண்டிய வேலையும் மேற்சொல்லப்பட்ட ஸ்தாபனங்களை இயக்குவதற்கான பூர்வாங்க வேலைகளும் ஆரம்பமாகின.

அடுத்த செப்டம்பரில் லண்டனில் நடந்த முதலாவது ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயம் நியூயோர்க் நகரில் நிறுவப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

நிரந்தரமான ஒரு கட்டடம் அமைக்கப்படும் வரை பொதுச்சபைக் கூட்டங்களும் செக்ரடேறியட் அலுவலகளும் நியூயோர்க்கிலுள்ள பல்வேறு ஹோட்டல்களிலும், கல்லூரிகளிலும், கந்தோர் கட்டடங்களிலும் நடைபெற்றன,

1946-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கியநாடுகள் தலைமைக்காரியாலயம் அமைப்பதற்கு 18 ஏக்கர் காணி வாங்க ஜோன் டி. றெக்ஃபெல்லர் என்ற அமெரிக்க பிரபு 85 லட்சம் டாலர் நன்கொடை வழங்கினர். இத்துடன் அமெரிக்க அரசாங்கம் கொடுத்த 65 லட்சம் டாலர் கடனுடன் கட்டிடவேலைகள் ஆரம்பமாகி 39 மாடிகள் கொண்ட ஐ. நா. தலைமைக் காரியாலயம் 1951-ல் முடிவடைந்தது.

ஐ. நா. சபையின் அங்கத்துவம் ஐம்பதோடு ஆரம்பித்து, 1955-ல் அறுபதாகி இன்று கிடடத்தட்ட 120 ஆகிவிட்டது. யுத்தத்துக்குப் பின் சுதந்திரம் பெற்ற பல சிறிய ஆசிய, ஆபிரிக்க நாடுகள் அதில் அங்கம் வகிக்கின்றன.

ஐக்கியநாடுகள் சாஸனத்துக்கு நான்கு வல்லரசுகளும் மற்றைய நாடுகளும் தத்தம் அரசாங்கங்களிடமிருந்து உத்தியோகபூர்வமான அங்கீகாரம்பெற்றபின்பு 1945ம் ஆண்டு ஒக்டோபர் 24-ம் திகதியே ஐ. நா. சபையின் பிறப்பு என்று தீர்மானிக்கப்பட்டது. இத்தினம் இன்று உலகம் எங்கும் கொண்டாடப்படுகிறது. — சுப்பு

## பத்திரிகைகளுக்குப் பங்குண்டு

கோப்பாய், வியாழன்

கூட்டுறவியக்கவளர்ச்சியிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் பத்திரிகைகளுக்கு பெரும் பங்குண்டு. கோப்பாய் கி. ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தனது செய்தியில்கூறியுள்ளதாவது

இன்று நமது நாடு பொருளாதாரத்திலும் கூட்டுறவு இயக்கத்திலும் பூரணவளர்ச்சியடையாதிருப்பது மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியின்மையாலேயாகும். இத்தகையதொரு நிலைமாறுவதற்கும், மக்களுக்கு இயக்கத்தின்நன்மையை அறிவுறுத்துதற்கும், பத்திரிகைகள் முக்கிய பங்கு வகிக்கவேண்டும்.

கூட்டுறவியக்கம் நல்ல முறையில் வளர்ச்சியடைந்தால் நாடு செழிப்படைவதுடன் நாட்டின் பொருளாதார வளமும் சிறந்து விளங்கும் எனவும் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

### ''பனம் பொருள்களுக்கு வெளிநாடிலும் கிராக்கி உண்டு''

மண்டைதீவு, வியாழன்

''எமது பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்வது குடிசைக்கைத் தொழில்களாகும். இத் தொழில்களுக்கு அடிப்படையான மூலப்பொருள்களைத் தருவன வற்றில் பனையும் ஒன்று. இம்மர உற்பத்தியில் தீவுப்பகுதி முன்னிற்கிறது என்ருல் மிகையாகாது. இதன் மூலம் இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் தம் அன்ருட வாழ்க்கைக்கு வேண்டிய சில பொருட்களையாவது பெறமுடிகிறது. பனம்பொருள்களுக்குஇன்று இலங்கை பூராவும் மட்டுமன்றிபிறநாடுகளிலும் நல்ல கிராக்கி இருக்கிறது.''

இவ்வாறு மண்டைதீவில் நடைபெற்ற பனைமரநாட்டு விழாவில் தலைமை வகித்துப் பேசிய மண்டைதீவு கிராம சேவகர் திரு. எஸ் திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

## நவீன மார்க்,..

1-ம் பக்கத் தொடர்ச்சி

கும்பான் மண் விலை குறைந்திருப்பதால், குறைத்து பணம் தருவதாக கூறிஞர்கள். இப்போது ஏற்றுக் கொள்வதாக கூறினேம். ஆனுல் இன்னும் காசுகிடைக்கவில்லை.

மேயரும், இன்ஜினியரும் சபையும், நிதிகமிட்டியும், காசு கொடுக்கும்படி கூறிய பின்னரும் ஏன் பணம் தரவில்லைஎன்பதுதான் எமக்குப் புரியவில்லை. செப்டம்பர் 25ம் தேதி நாம் முக்கிய அதிகாரியை சந்தித்தபோது மறுநாள் தருவதாக கூறிஞர். ஆனுல் இன்றுவரை தரப்படவில்லை. இது ஒப்பந்தத்திற்கு முரணனசெயல் ஒரு மாதத்திற்கு மேல் காசு தரத் தாமதிக்க முடியாது. அதன்பின் வட்டி கட்ட வேண்டிய நிலை ஏற்படும். அப்படியாஞல் அந்த வட்டிககாசு கொடுகக யார் பொறுப்பாயிருந்தார்களோ அவர்கள் மீது 'சார் சார்ஜ்' வரும் காசு உடனே தராவிடில் நாங்கள் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கமுடியாத நிலை ஏற்படும். காசு தர முடியாவிடில்பதில் கூடத்தர முடியாதா?

மண் சம்பந்தப்பட்ட பணமாக 6051 ரூபாவும் தூண்கள் நடுவதற்குக் குழிகள் தோண்டும் போது தென்படும் கற்பாறைகளை உடைப்பதற்குச் செலவான 1711 ரூபாவும் இன்னும் தரப்படவில்லை. இப்பணத்தைத்தர ஏன் தாமதிக்கிருர்கள் என்பதைப் பொதுமக்கள் அறியவேண்டியது அவசியம்

## மாணவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானலிங்கம் கே தங்கரத்னம், ஏ ராசரத்தினம், கே கந்தசாமி, எஸ் சதாசிவம், பீ இந்திராணி, பீ பாலகிருஷ்ண பிள்ளை.

கோப்பாய்: எஸ் திரவியம், எஸ் பரமேஸ்வரன், என் முருகேசு, ஏ ராஜகுமாரி, பி பரிமேலழகப் பிள்ளை, கே இந்துகுமாரி. ஆர் தனராஜா, எஸ் வல்லிபுரம், எஸ் சீதாதேவி.

நல்லூர்: எஸ் சுலோசஞ, என் ராஜேஸ்வரி, எம் நாகமணி, கே சேஞதிராஜா, ஆர் நாகராஜா, எஸ் மங்கையர்க்கரசி, எஸ் விஸ்வநாதன், கே சந்திரா, எஸ் சுந்தரமூர்த்தி, எம் சுப்பையா, ஆர் சுபத்திரா, என் சபாரத்னம், பீ டபிள்யூ குலசீலி.

## விற்பனைக்கு

நல்ல பாவிப்பிலுள்ள 2 ஸ்ரீ 9000 இலக்கத் தொடர்புள்ள கோல்டன் (Holden) கார் விற்பனைக்குண்டு. திருக்குடும்பக் கன்னியர் மடம், 129 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org